கிரந்தாலயம்

Granthaalayam

மலர் - 3 ஏப்ரல் - மே - ஜீன் 2016 இதழ்-1
Volume - 3 April - May- June 2016 Issue - 1

ஞானத்திருக்கோயில்
குருநாதபுரம்

உலகிலே சாந்தி நிலவ வேண்டும்..
ஆத்ம சக்தி ஓங்க வேண்டும்..

The whole world may enjoy peace
Granthaalayam

கிரந்தாலயம்

(கற்பகதரு அறக்கட்டளையின் வெளியீடு)

9

மன்மத - துர்முகி வருடம் பங்குனி - ஆனி

மலர் - 3 இதழ் - 1 ஏப்ரல் - ஜூன் 2016

தாசனாக நின்றிருப்பேன்

நான் என்
பக்தனின்
அருகிலேயே
தாசனாக
நின்றிருப்பேன்.
அவர்களின்
பிரேமையே
எனக்கு உணவு.
அதற்காக நான்
பசியுடன்
தவித்துக்
கொண்டிருக்கிறேன்.
- சீரடி சாய்பாபா.

- உள்ளடக்கம் ...01
- ஆசிரியர் மடல் ...02
- பிரார்த்தனை ...03
- மௌன மொழி ...06
- அன்பு ...11
- ஸ்ரீ ஞானசாயி உலக சமாதான மையம் ...14
- ஆத்மன் ...18
- சில வரிகள் சில வழிகள் ...26
- மதி ...33
- வேத வேர்கள் ...36
- எண்ணிய முடிதல் வேண்டும் ...41
- நைமிசாரண்யம் ...46
- ஐயம் தெளிதல் ...54
- God is Love ...57

பதிவு அலுவலகம்
கற்பகதரு ட்ரஸ்ட்
#6, சுப்ரமணிய முதலி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15
அலைபேசி எண் : 9790917473.

Donations are invited
Our Bankers : State Bank of India
Valluvarkottam branch, Chennai.
Account Name : Karpagadaru Trust
Account no.: 31471914291
IFSC Code: SBIN0002244

Please visit: www.karpagadarutrust.wordpress.com
www.karpagadarutrust.weebly.com /thekarpagadarutrust

• ஆசிரியர் மடல்

அனந்தமே ஜெயம்

மீண்டும் கிரந்தாலயம் மூலமாய் தங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மோனலாயத்தை (உலக சமாதான ஆலயம்) உலகிற்கு சமர்ப்பணம் செய்திட்ட நிகழ்வு சரித்திரத்தில் ஒரு மைல்கல். இதற்காக உழைத்திட்ட அத்துனை தொண்டர்களுக்கும் நன்றி செலுத்துவதற்கே நான் கொடுத்து வைத்துள்ளேன். மோனலாயத்தில் தொடர்ந்து சேவை செய்து வருகின்ற அன்பர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

தற்போது வெயிலின் கடுமை கூடுதலாக உள்ளபடியால் நாமும் நமது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உடல் நலனுக்கேற்ற உணவு வகைகளை உட்கொண்டு நலமான வாழ்வு காண்போம். நீரின்றி தவிக்கும் பல ஜீவராசிகளுக்கு நமது வீட்டில் ஒரு சிறு வாளியில் நீர் ஊற்றி வைத்து உதவுவோம். கோடை விடுமுறையில் நமது குழந்தைகளுக்கு தேவையான நல்ல பல கல்விகளை அவர்கள் விரும்பும் வகையில் வழங்குவோம். நமது ஞானத்திருக்கோயிலில் 28.04.2016 முதல் 01.05.2016 வரை நடைபெறவுள்ள குழந்தைகள் திறனூக்க மேலாண்மைப் பயிற்சி வகுப்புகளில் குழந்தைகளை கலந்துகொள்ள வைத்து அவர்தம் நலனை காத்திடுவோம். குழந்தைகளின் மேற்படிப்பிற்கு அழகான திட்டங்கள் தீட்டி வெற்றி பெற ஏற்ற தருணம் இது. இதனை நன்றாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாய் கற்பகதரு ட்ரஸ்ட் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அனைத்து நல்லுதவிகளையும் இறைப்பேரருள் முன்னின்று காத்து வழிநடத்திட வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

எல்லாம் கைகூடும்

நாள்: 25.03.2016

அன்புடன்,

K. மோகன்

ஆசிரியர், கிரந்தாலயம், கற்பகதரு ட்ரஸ்ட்க்காக.

பிரார்த்தனை

உடல் நலம் அறிவோடு செல்வம் கீர்த்தி
உயர்வடைந்து மேன்மேலும் சிறப்பாய் வாழ்க!
கடன் என்ற புண் இன்றிக் கைப்பொருள் இருப்புப் பெருகி
கடமைகளை நன்காற்றிக் களிப்புற்று வாழ்க ! வாழ்க!

- குரு ஸ்ரீ யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி.

இறையே! குருவே!

உலகிலே மேன்மை தங்கிய உயிரினம் மனித இனம். ஆறாம் அறிவில் உயர்ந்து வாழ்வதற்காக இயற்கை அளித்திட்ட அருட்கொடையே ஆறாம் அறிவு. ஆறாம் அறிவின் துணை கொண்டு இயற்கையின் ஓர் அங்கமாகவே வாழும் மனிதன் இயற்கை வளத்தை பெருக்கிடவும், வாழ்வின் வளத்தை பெருக்கிடவும் தன்னில் இயற்கையாய் அமைந்திட்ட அதே அறிவுதனை பயன்படுத்திக் கொள்கின்றான். இவ்வாறு இயற்கையின் வளத்தினை வாழ்வின் வளமாக மாற்றித்

துய்ப்பதற்கும், இயற்கை அறிவின் உச்சத்தில் அறிவையே அறிந்து முழுமை நிலை பெறுவதற்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் 1) உடல் நலம் 2) அறிவு 3) செல்வம் 4) கீர்த்தி 5) கடன் சுமை இல்லாத வாழ்க்கை மற்றும் 6) கடமைகளை சிறப்பாய் ஆற்றும் திறன் போன்றவை தேவையாகும்.

1) உடல் நலம் - மன நலத்தையும், உயிர் நலத்தையும் போற்றினால் உடல் நலம் பெறலாம்.

2) அறிவின் மேன்மை - அது இயற்கையறிவு, எழுத்தறிவு அனுபவ அறிவு என்பதாக விரிகிறது.

இத்தகைய அறிவு மேன்மையடையும் போது அறிவு நுண்மாண் நுழைபுலன் அறிவாகி அறிவை அறியும் இவ்வறிவே, அறிவின் உச்சநிலை பெறும்.

3) செல்வம் - வாழ்வின் வளத்தினை பெருக்கிடவும், கடமையறம் நின்று செயலாற்றிடவும் தேவை செல்வம். இச்செல்வத்தினை நேர்மையான முறையில் ஈட்டி காத்து பிறர்க்களித்து உதவ வேண்டும்.

4) கீர்த்தி - உயர்ந்த புகழ் எனப் பொருள்படும். அதாவது பிரதி செயலையோ, புகழையோ எதிர்பாராது தான் உலகிற்கு ஆற்றும் தொண்டிற்கு உலகம் கொடுக்கும் வெகுமதியையே கீர்த்தி என்கின்றோம். இத்தகைய கீர்த்தியை ஒவ்வொரு மனிதனும் பெற வேண்டும்.

5) கடன் சுமை இல்லாத வாழ்க்கை - நமது ஒவ்வொரு நாள் வாழ்கையையும் காப்பது சமுதாயமும் இயற்கையுமேயாகும் என்பதால் தினசரி சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் நாம் கடன்பட்ட வகையிலேயே நமது வாழும் காலம் நகர்ந்து கொண்டுள்ளது. சமுதாயத்திலிருந்து பெற்றிருந்தாலும் சரி, இயற்கையிடமிருந்து பெற்றிருந்தாலும் சரி கடனை அடைத்தே தீர வேண்டும். காசு, பணம், பொருள் போன்ற கடனை நேர்மையான உழைப்பின் மூலமும் சிக்கனம் மற்றும் சீர்த்திருத்தம் கொண்டும் அடைக்க

கற்பகதரு ட்ரஸ்ட்
கிரந்தாலயம்

வேண்டும். நல்ல சிந்தனை செய்து அவரவருக்கு ஏற்ற வகையில் சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் ஆற்ற வேண்டிய தொண்டினை செய்தும் கடனை அடைக்கலாம். அக்கடனை அடைத்திட வேண்டிய வழியினை தக்க ஒரு குருவின் உதவி கொண்டோ அல்லது நல்லோர் இணைப்பு கொண்டோ சிந்தனையில் தெளிவு பெற்று தம்மை தயாரித்துக்கொள்ளலாம்.

6) கடமைகளை சிறப்பாய் ஆற்றி செயல்படுதல் - ஒவ்வொரு மனிதனும் தன்னை காத்திட வேண்டிய கடமை, குடும்பத்தை காத்திட வேண்டிய கடமை, குருமார்களை அல்லது உலகிற்கு உழைப்போரை காத்திட வேண்டிய கடமை, ஊரை காத்திட வேண்டிய கடமை மற்றும் உலகை காத்திட வேண்டிய கடமைகளை செய்தல் அவசியமாகும். இதுவே கர்ம யோகம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இத்தகைய சிறப்பான பேறுகளை ஒவ்வொரு மனித சீவனும் பெற வேண்டியே அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் வாழ்த்துகிறார்கள்.

உலகம் உய்ய வேண்டும்... உலகிலே சாந்தி நிலவ வேண்டும் என இறைநிலையோடு எண்ணத்தை குவித்து உங்களின் சார்பாய் பிரார்த்திக்கின்றேன்.

அனந்தமே ஜெயம் எல்லாம் கைகூடும்

L.L.S. மணிகண்டன்

ஞானத்திருக்கோயில்

குருநாதபுரம் (ஆம்பூர் அருகில்), வேலூர் மாவட்டம்.

நிகழ இருப்பவை - திருப்பத்தூர் சேவை மையம்

பிரதி மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை

ஆத்மன் – ஆன்ம நல மேம்பாட்டுப் பயிற்சிகள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு வாழ்வில் வளங்கள் பெற அன்போடு அழைக்கின்றோம். **மேலும் தொடர்புக்கு – 94434 90219**



மௌன மொழி

- ஸ்ரீ வேதாத்திரி மகரிஷி

தொடர் - 2

கற்பகதரு ட்ரஸ்ட்

குரு ஸ்ரீ வேதாத்திரி மகரிஷி அவர்கள் பொள்ளாச்சி அருட்பெருஞ்சோதி நகர் ஆஸ்ரமத்தில் 25-11-1987 முதல் 25-12-1987 முடிய பல மெய்யுணர்வாளர்களுடன் மௌன தவம் இயற்றினார்கள். அந்த நிகழ்வில் 06.12.1987 முதல் 24.12.1987 வரை அவர் உண்மை உணர்வாக பெற்ற சிந்தனைகள் எல்லாம் எழுதப்பட்டு மெய்யுணர்வார்கள் மத்தியில் தினமும் காலை 10 மணிக்கு பிறர் ஒருவரால் படித்துக் காட்டப்பட்டன.

கிரந்தாலயம்

அவற்றை அனைத்து அன்பர்களும் படித்து பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் ஆசான் அருட்தந்தை அவர்களின் நல்லாசியின் துணை கொண்டு தற்போது தங்கள் முன்னிலையில் பகிர்ந்து மகிழ்கின்றோம்.

ஆசான் ஆணையே வழித்துணை.

மௌன மொழி

மௌன சிந்தனை - 2 - நாள் 7.12.1987

பேரியக்க மண்டலம் கணக்கிட இயலாத பருமன் உடையது. அதில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள்(சூரியன்கள்), கோள்கள் அதனதன் விரைவிலே, பாதையிலே சற்றும் பிறழாமல் உலவிக் கொண்டிருக்கின்றன. மனிதர்கள் வாழும் இப்பூவுலகத்தில் மனித இனம் மட்டுமல்லாமல் பல கோடிக்கணக்கான உயிரினங்களும் வாழ்ந்து வருகின்றன. இவையெல்லாம் இறையென்ற பூரண ஆற்றலின் அழுத்தமென்ற விரைவாலும், ஒழுங்காற்றல் என்ற பிறழா நெறியாலும், பிசகாமல், சத்தியம் தவறாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்பேராற்றலின் கருணையினால் ஒவ்வொரு சீவனும் பிறக்கும்போதே அதன் வாழும் காலம் வரைக்கும் அதற்குத் தேவையான அனைத்தும் இருப்பாக இணைக்கப்பட்டு உள்ளன. இவற்றையெல்லாம் நமது மனதை விரித்து எண்ணிப் பார்ப்போம். இறைநிலை, பேரியக்க மண்டலம், உயிரினங்கள், இன்ப துன்ப விளைவுகள், எண்ணம், செயல்கள், விருப்பம், நிறைவு என்ற எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்ந்த இணைந்த ஒரு தொடர் ஏற்பாடாக நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. நமக்கென்ன குறை? எனக்கென்ன குறை?... உண்மையாகவே இயற்கையமைப்பில் குறை என்பது எள்ளவும் இல்லை. பின்னர் ஏன் மனக்குறை மற்றும் உடல் நலக்குறை?

உண்மையாகவே
இயற்கை
அமைப்பில்
குறை என்பது எள்ளவும்
இல்லை.

மனித உள்ளத்தில் தேவையுணர்வு, விருப்பம் என்று இரண்டு எண்ண எழுச்சிகள் உள்ளன. தேவை இயற்கையானது. அது

உடலையும் உயிர் வளர்ச்சியையும் ஒட்டி எழுவது. விருப்பம் தேவையிலிருந்தும் எழலாம், கற்பனையாகவும், பழக்கத்தை ஒட்டியும் எழலாம். விருப்பங்களை அப்படியே செயல்படுத்திட முனைந்து உடலை இயக்கவிடும் போது மக்கள் தம்முள் அமைந்த ஞானத்தை பயன்படுத்தி வீணாக்குகின்றனர்.

தேவையும் விருப்பமும் உடையதே சீவ இனம் அனைத்தும். உன் தேவையை முடிக்க முயலும் போது பிறர் தேவையும் விருப்பமும் தாக்கப்படாமல் இருக்க வேண்டும். மேலும் உனது உடல் மிக நுட்பமாக உனக்கு உயர் வாழ்வு அளிக்க இயற்கையால் நீண்ட காலமாக, பல தலைமுறைகளாக வடிவமைக்கப்பட்டது. உன் எந்த எண்ணத்தாலும் செயலாலும் உனது உடலில் உள்ள எந்த உறுப்பும் நலியாமல் இருக்க பார்த்துக் கொள்ள வேண்டும். எந்த உயிருக்கும் அதன் துன்பத்திலிருந்து விடுபட இயன்ற அளவில் உதவி செய்து கொண்டே இருக்க வேண்டும். மனிதன் இவ்வாறான கடமையிலிருந்து தவறும்போது, மூளை செல்களின் அமைப்பும், உடல் உறுப்புகளின் செல்கள் மற்றும் அவற்றின் அடுக்குகளும் சீர்குலைகின்றன. இதனால்தான் மனதில், உடலில் துன்பங்கள் தோன்றுகின்றன. இவற்றை உணர்ந்து திருத்திக் கொள்ளும் வாய்ப்பே குண்டலினியோகம். உடலிலே, மூளையிலே ஏற்பட்டுவிட்ட சீர் குலைவு வாழ்வில் பல்வேறுபட்ட குறைகளாக மாறுகின்றன. இக்குறைகள் கருவின் மூலம் உங்கள் குழந்தைகளுக்கும் தொடர்கின்றன. தவமும் அறமும் ஆற்றித்தான் இந்த உடல் அணு அடுக்குகளை சீர்செய்ய முடியும். எந்த குறையும் உங்கள் செயலின் பதிவே என்று உணர்ந்து ஏற்றுக் கொண்டு சிந்தனையாலும்,

உங்கள் குறை தீர்க்க நீங்கள் முயலாவிடில் வேறு யாராலும் முடியாது. பிறர் மூலம் உங்கள் குறையை முடிக்க எதிர்பார்க்க வேண்டாம்.

கிரந்தாலயம்

அறவழியாலும் சீர் செய்ய முயலுங்கள். உங்கள் குறை தீர்க்க நீங்கள் முயலாவிடில் வேறு யாராலும் முடியாது. பிறர் மூலம் உங்கள் குறையை முடிக்க எதிர்பார்க்க வேண்டாம்.

ஒருவரது விருப்பத்தில் (1) தேவையின் நீதி (2) அளவு (3) தன்மை (4) காலம் என்ற நான்கு உறுப்புகள் உள்ளன. எல்லாருடைய விருப்பமும் என் விருப்பத்தை ஒட்டியே இருக்க வேண்டுமென்று நினைப்பது மனித மனதின் தவறுகளின் தலையாயது. பொறுமை, விட்டுக் கொடுத்தல், தியாகம் என்ற மூன்றையும் இடம், காலம், தொடர்பு கொள்ளும் மக்கள் இவற்றிற்கேற்ப பயன்படுத்தினால் **உலகையே நீ உன் வசமாக்கிக் கொள்ளலாம்.** பிறரிடம் உள்ள தீமையை எண்ணிப் பார்ப்பது அவர்களோடு எவ்வாறு பழகுவது என்பதை வகுத்துக் கொள்ள உதவும், வெறுப்பு கொள்வதற்கு அல்ல. நன்றி செலுத்து, இங்குதான் உனக்கு அமைதியும், நிறைவும் உண்டாகும். இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டால் போதாது. பழக்கத்தில் கொண்டு வந்து வெற்றி பெறு. உயர்வு நிச்சயம்".

கற்பகதரு டிரஸ்ட்

விளக்கம்:

பேரியக்க மண்டலம் என்பது பூமியும், எண்ணிலடங்கா நட்சத்திரங்களும், ஏனைய கோள்களும் மிதந்தும், உருண்டும், சுழன்றும் கொண்டிருக்கும் ஒரு பெரிய இயக்கக்களம்.

கிரந்தாலயம்

இந்தப் பேரியக்க மண்டலத்தில் உள்ள ஒவ்வொன்றும் அதனதன் விரைவிலே, பாதையிலே சற்றும் விலகாமல், பிசகாமல் உலவிக் கொண்டுள்ளது. இறைவன் அல்லது இறை என்ற பூரணத்தின் ஆற்றல் மற்றும் அதன் ஒழுங்கு நிலை சத்தியம் தவறாமல் இந்த பேரியக்க மண்டலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலை மற்றும் ஆற்றல் ஒவ்வொரு பொருளையும் அல்லது சீவனையும் தோற்றுவிக்கும்போதே அவை வாழும் காலம் வரைக்கும் உண்டான அனைத்து வளங்களையும்

ஏற்கனவே படைத்தும் காத்தும் வருகின்றது. இதனையெல்லாம் மனதை விரித்துப் பார்த்தால் மேலும் பல உண்மைகள் துலங்கும். இப்படி அனைத்து வளங்களும் உள்ள பேரியக்க மண்டலத்தில் குறை என்பது எங்கேயுள்ளது? பின்னர் ஏன் மனக்குறை நமக்கு உள்ளது? காரணம் மனிதனிடம்,

1. தேவையால் எழும் உணர்வு
2. விருப்பத்தால் எழும் உணர்வு

என்ற இரண்டு எண்ண எழுச்சிகள் உள்ளன. தேவையால் எழும் உணர்வு இயற்கையானதே. ஆனால் விருப்பம் அல்லது கற்பனையாய் எழும் உணர்வினை செயல்படுத்திட மனம் உடலை இயக்கிவிடும். அவ்வாறு உடல், மனம் இயங்கிட செலவாவது இந்த உடலுக்குள் அமைந்த ஞானம் என்ற உள்ளார்ந்த அறிவாகும். ஆனால் இந்த ஞானத்தை செலவழிக்கும்போது உடல் உறுப்புகள் நலியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அளவும் முறையும் காத்திட தேவையானதுதான் குண்டலினியோகம். இந்த யோகத்தின் மூலம் பொறுமை, விட்டுக்கொடுத்தல், தியாகம் என்ற மூன்றையும் இடம், காலம், தொடர்பு கொள்ளும் மக்கள் இவற்றிற்கேற்ப பயன்படுத்தினால் உலகையே வசமாக்கிக் கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துவது என்ற பழக்கத்தினை வாழ்வில் பழக்கமாக்கிக் கொண்டால் உயர்வும் வெற்றியும் நிச்சயம் என்ற கருத்தினை சுவாமிஜி நமக்கு இந்த மௌன மொழியில் அழுத்தம் திருத்தமாக தருகின்றார்கள்.

எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துவது என்ற பழக்கத்தினை வாழ்வில் பழக்கமாக்கிக் கொண்டால் உயர்வும் வெற்றியும் நிச்சயம்.

மீண்டும் மௌன மொழி தொடரும்...

அன்பு

புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு - திருக்குறள்- 79.

அன்புடையோரே!

மனித வாழ்வு சிக்கல்களையும், சிரமங்களையுமே சந்தித்த வகையிலேயே உள்ளது. தன் உள்ளத்தினுள் அமைந்திருக்கின்ற அமைதியையும், ஆனந்தத்தினையும், அன்பினையும் சுவைத்திட அவனுக்கு நேரம் கிடைப்பதில்லை. இதைத்தான் புறமன வாழ்க்கை என பல பெரியோர்கள் கூறி வருகின்றனர். மனித வாழ்வு பெரும்பாலும் புறச்சூழலை அனுபவித்து அதற்கொப்ப ஒப்பீடு செய்து வாழப் பழகிக்கொண்டே வருவதால் சுயநலமுடன் கூடிய சுய ஓட்டம் அதிகரித்த வகையிலே அவனது காலம் நகர்ந்து கொண்டே செல்கின்றது. என்ன செய்வது என்று யோசிக்கவும் நேரம் இல்லை, என்ன செய்யலாம் என்று சிந்தனை செய்வதற்கும் நேரம் போதவில்லை. அதனால் பெரியோர்கள் வகுத்த அமைதி வழிக்குள் அவனால் சென்றிடவும் முடியவில்லை. இதனால் உலகம்

இன்று காண்பது சுயநல வாழ்வினை மட்டுமேதான். தான் நன்றாக இருக்க வேண்டும் என்ற மனதின் நிலைபாடு காரணமாக மனித இனம் தனது குடும்பத்தில் உள்ள மனைவி, கணவன், குழந்தைகள் மற்றும் பெரியோர்களைக்கூட தவிர்த்து சுயநலத்திற்கான வாழ்க்கையினை மட்டுமே வாழப் பழகிக்கொண்டு வாழ்ந்து வருகின்றது. மனிதன் என்ற வகையில் கை, கால், மூக்கு, கண்கள் என்ற பல உறுப்புகளை அழகுற பெற்றிருக்கின்றான். தன்னிடம் அழகு இல்லையென்றாலும் பல வழிகளில் தன்னை அழகுப் படுத்திக் கொள்கின்றான். இருப்பினும் அவனால் தன் அழகினை தானே பார்த்திட முடியுமா? தன் புற உறுப்பு அழகினை தான் கண்ணாடி முன் நிற்கும்போது மட்டுமே அவனால் பார்க்க முடிகின்றது. பின்னர் எதற்காக இந்த அழகுப்போட்டி? பிறர் தன்னை பார்க்க வேண்டும், பிறர் நமக்கு மதிப்பிட வேண்டும் என்ற மனோபாங்கே இத்தகு செயல்களுக்கு காரணம் ஆகும். புற அழகினை எவ்வாறெல்லாம் மெருகூட்ட முயற்சிக்கின்றோமோ அதில் ஒரு சில நிமிடங்கள் அக அழகிற்காக முயற்சி செய்தால் அதுவே அன்புப் பயணத்தின் ஆரம்பம் என்று சொல்லலாம்.

குறள் என்ன கூறுகின்றது?

உள்ளத்தின் உள்ளே அமைந்திருக்கின்ற அன்பினை பயன்படுத்தி வாழ தெரியாதவர்களுக்கு, எவ்வளவு அழகான புற உறுப்புகள் அமைந்திருந்தாலும் அவற்றால் என்ன பயன்? என்கிறது.

உடலுக்குள்ளாக உறைந்திருக்கின்ற அன்பு என்ற உள்ளத்தின் வாழ்க்கையினை ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்தேயாக வேண்டும். உள்ளம் உறைந்திருக்கின்ற உடலை பேண வேண்டும் என்பதற்காக படைக்கப்பட்டவையே உடல் புற உறுப்புகள். புற உறுப்புகள் அகத்தில் ஓங்கும் அன்பைக் காக்க வேண்டும், அன்பு உலகைக் காக்க வேண்டும் என்பதற்காக பிறந்திட்ட மனிதப்பிறப்பு, தடம் மாறலாமா?

உள்ளத்தில் அன்பினை வளர்த்திடுவதற்காக,
புற உறுப்பினை பாதுகாப்போம்.
உடல் புற உறுப்புகள் யாவும் உள்ளத்தினை காக்கட்டும்!
மக்களின் அன்பு வளம் உலக அன்பினை வளர்க்கட்டும்!
அமைதியும் ஆனந்தமும் பெருகட்டும்!

அன்புடன் *L.L.S.M.*

கோ பராமரிப்பு

அன்பர்களே!

கோ தானம் செய்வதன் மூலம் ஒருவர் தான் அறிந்தும், அறியாமலும் செய்த அனைத்து பாவங்களிலிருந்தும் விமோசனம் பெறுவதாக நமது முன்னோர்கள் கூறியுள்ளனர்.

நமது கற்பகதரு ட்ரஸ்ட் சார்பாக குருநாதபுரம் ஞானத்திருக்கோயிலில் கோசாலை அமைக்கப்பட்டு, அதில் அன்பர்கள் தானமளித்த பசுக்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே. பசுக்களை தானமளித்த அன்பர்களான செல்வி. ஸ்ரீநிதி ஜனனி ஆனந்தன் - வாலாஜா, திரு. தியாகராஜன் - சென்னை, திரு. சுந்தர் - சென்னை, திருமதி. சுதா சண்முகம் - சென்னை, திருமதி. மீனாகிருஷ்ணன் - திருப்பூர் அவர்களுக்கும், மேலும் சில பசுக்களை தானம் அளிப்பதற்கு முன் பதிவு செய்துள்ள அன்பர்களான, திரு. யுவராஜ் மற்றும் திரு . சுரேஷ் - கோவை, A.R. பிரிண்டர்ஸ் - திருப்பூர் அவர்களுக்கும் கற்பகதரு ட்ரஸ்ட் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

நமது கோ சாலையில் உள்ள பசுக்களைப் பராமரிக்க மாதம் சுமார் ரூ. 5000 செலவாகிறது. பசுக்களின் பராமரிப்பு செலவை ஏற்றுக்கொள்ளுதலும் பல புண்ணியங்களை செய்வதற்கு ஈடானதாகும் என்பதால், கோதானம் செய்ய இயலாதவர்கள் கோ பராமரிப்புக்கான செலவில் ஒரு சிறு பங்களிப்பினை ஏற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் திருமதி.M. சுஜாதா அம்மா அவர்களை 97908 89393 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.



எல்லாம் கைகூடும்

குருநாதபுரம்

ஸ்ரீ ஞானசாயி உலக சமாதான மையம்

SHREE GNANA SAI WORLD PEACE CENTER

“எல்லா விசயங்களையும் ரகசியமாகவே செய்து தருவேன். யாருடைய கண்களில் கண்ணீர்த்துளிகள் கசிந்து உருகி ஒடுகின்றனவோ அவர்கள் ஆத்மார்த்தமாக வேண்டுகிறார்கள். மற்றவர்கள் அந்த அவசியத்தில் இல்லை என்பதால், மேம்போக்காக வேண்டுகிறார்கள். எங்கே வெள்ளம் புரண்டு வருகிறதோ அங்கே அது பல வழிகளை உண்டாக்குகிறது. நீர்வரத்து இல்லாத இடங்களில் வழிகள் உண்டாவதில்லை. இதுதான் கண்ணீருடன் வேண்டுகிற வேண்டுதலுக்கும், கடமைக்காக வேண்டுகிற வேண்டுதலுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்.

கர்மங்களை குறைத்துக் கொள்ள வழி, அதை தைரியமாக அனுபவிப்பதே, நீங்கள் எப்போதும் என்னை நினைத்துக் கொண்டிருந்தால், என் மேல் நம்பிக்கை கொண்டிருந்தால் அதை அனுபவிக்கும் சக்தியை நான் கொடுக்கின்றேன். துன்பம் என்ற எண்ணம் உங்களில் ஏற்படாமல் நான் செய்கிறேன்.”

- சீரடி சாய்பாபா.

குருநாதபுரத்தில் (ஆம்பூர்-குடியாத்தம் சாலையில்) சீரடி பாபா **ஞானசாயியாய்** திருஅருள் புரிய உள்ளார்கள். எல்லாவற்றையும் கைகூட்டிவிக்கும் ஞானத் திருமேனியாய் இங்கு அருள் பொழிந்திட உள்ள சாய்நாதருக்கு திருக்கோயில் கட்டும் பணிகள் நடந்த வகையில் உள்ளது. 92 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்டதாய் இத்திருக்கோயில் அமைந்திடும். அதற்கான திருப்பணிகளில் தங்களையும் இணைத்துக்கொள்ள வரவேற்கின்றோம்.

“உன்னைச் சூழ்ந்து உடன் வருவேன்”

“அறியாமை உள்ளவர்களை நான் அதிகம் நேசிக்கின்றேன். மேதையைத் தள்ளி பேதையிடம் என் ஞானத்தை வெளிபடுத்துகிறேன். குழந்தைகளின் வார்த்தைகளால் உலகத்தோடு பேசுகிறேன். இதையெல்லாம் புரிந்து கொண்டு எழுந்து தைரியமாய் போ! எதையும் தாங்கிப் பார்... வாழ்ந்து விடலாம். இந்த சாயி உன் பின்னாலும், உனக்கு முன்னாலும், உன் பக்கவாட்டுகளிலும் சூழ்ந்து கொண்டு உடன் வருகிறான் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு என் பெயரை உச்சரித்து வா!” - ஸ்ரீ சாயியின் குரல் - இக்குரலின் அருளில் கோயில் திருப்பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

இந்த திருப்பணிகளில் இதுவரை 64 அன்பர்கள் புரவலர்களாக தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர். இவர்களது பெயர்கள் ஒவ்வொரு கிரந்தாலயத்திலும் பதிப்பு செய்யப்பட்டு வருகின்றன. புரவலர்களாக தாங்கள் இணைய விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள படிவத்தினை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

சாய்நாதருக்காக தம்மை அர்பணிக்கும் தொண்டுள்ளம் கொண்டோரை வரவேற்கின்றோம். தங்கியிருந்து சேவை புரிய விரும்புவோர்களுக்கு தக்க கௌரவத் தொகையும் கொடுத்து மகிழலாம் என்ற எண்ணமும் உண்டு.

கீழ்காணும் புரவலர்கள் தற்போது இணைந்துள்ளனர். 'அவர்களையும் அவர்களது அன்பு குடும்பத்தார் அனைவரையும் குரு சாயிநாதர் காத்திட வேண்டும்' என மனதார பிரார்த்திக்கின்றோம்.

திருவாளர்கள்

42. எம்.விஜயன், திருப்பத்தூர்
43. ஆர். அபிநந்தனா, திருப்பூர்
44. ஆர். பால மீனாட்சி, சென்னை
45. பி. ராஜேஸ்வரி, ஹைதராபாத்
46. ஜி. கவிதா கணேசன், திருப்பூர்
47. டி. சித்ரா தமிழரசன், ஊத்துக்குளி
48. என். ஷனாமிகா, சென்னை
49. எஸ். ஷர்மிலி வீரமணி, பி.குமாரபாளையம்
50. டி. ஹரிநாத் பாபு, சென்னை
51. ஜி.கே. அச்சுத பத்மா, திருப்பத்தூர்
52. பி. செண்பகம், திருப்பத்தூர்
53. ஏ. சுப்ரமணியம், பி. குமாரபாளையம்
54. டி. ப்ரத்யும்னன், பவானி
55. எஸ். சங்கரி, அமெரிக்கா
56. பி. ரவீந்திரன், மதுரை
57. எஸ் . சுகனேஷ் சுருளிராஜ், சென்னை
58. எம். ரஞ்சித், திருக்கழுக்குன்றம்
59. ஜெ. ரம்யா, திருக்கழுக்குன்றம்
60. எம். சுகந்தி மனோகரன், திருக்கழுக்குன்றம்

கற்பகதரு ட்ரஸ்ட்
கிரந்தாலயம்

61. வி. திலகம் விஜயகுமார், சேலம்

62. ஜி. ஹம்ருதா, ராணிப்பேட்டை

63. கே. பார்த்தசாரதி, திருப்பூர்

64. ஜி. மனோன்மணி, அரக்கோணம்.

மேலும் தொடர்புக்கு:

ஸ்ரீ. C.A.G. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

அலைபேசி எண் : 94434 90219

மின்னஞ்சல் - gnanasaicenter@gmail.com

வங்கி விபரம்

BANK: **BANK OF BARODA,** BRANCH: **VELACHERRY, CHENNAI**

ACCOUNT NAME: **SHREE GNANA SAI WORLD PEACE CENTER**

ACCOUNT NUMBER: **35860200000122,** IFSC CODE: **BARB0VELACH**

zero

- தலைவர், ஸ்ரீ ஞானசாயி உலக சமாதான மையம்.

கோடைகால

குழந்தைகளுக்கான திறனூக்க மேலாண்மைப் பயிற்சி

இடம் : ஞானத்திருக்கோயில், குருநாதபுரம்.

நாள் : **28.4.2016 முதல் 1.5.2016 வரை**

பயிற்சி, உணவு, தங்குமிடம் இலவசம்.

பயிற்சிப் பொருட்களுக்காக ரூ. 70 மட்டும் / 1 நபருக்கு

மேற்காணும் பயிற்சிகள் யாவும் நிபுணத்துவம் பெற்ற

ஆசிரியர்களால் நடத்தப்படும்.

தொடர்புக்கு யோகி. N. மீனாகிருஷ்ணன் அவர்கள்

அலைபேசி : 94432 65924

ஆத்மன்

ATMAN

- L.L.S. மணிகண்டன்

கற்பகதரு ட்ரஸ்ட்

பாடம் - 2

அடிப்படை

சாந்தி பாடல் -1

ஸ ஹ நாவவது I ஸ ஹ நௌ புநக்து I
ஸ ஹ வீர்யம் கரவாவஹை I
தேஜஸ் விநாவதீதமஸ்து மா வித்விஷாவஹை I
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: II

கிரந்தாலயம்

விளக்கம்

இறைநிலை என்ற மாபெரும் சக்தி குரு - சீடர்களாகிய எங்களை காக்குமாக. நாங்கள் அல்லது எங்களால் செய்ய முற்படுகின்ற சாதனைகளை நாங்கள் இருவருமே சேர்ந்து

செய்வோமாக. எங்களுடைய சாதனைகள் ஒளி பொருந்தியதாக இருக்கட்டும். நாங்கள் ஒருவரையொருவர் வெறுக்காமல் இருப்போமாக.

ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி.

அடிப்படை

மனிதன் என்ற பிறப்பு இப்பூவுலகில் மிகவும் உன்னதமானது மற்றும் பெருமைக்குரியது. இவற்றையெல்லாம் ஏற்கனவே பல பெரியவர்கள் பலமுறை முன்னமே கூறிவைத்துள்ளனர். மனிதனுடைய பெருமையினை உணர்வதும், போற்றுவதும் முதல் தகுதி என்றும்கூட சொல்லலாம்.

மனிதப்பிறவியை போற்றுவதா அல்லது உலகில் உள்ள அனைத்து மனிதரையும் போற்றுவதா அல்லது தான் என்று சொல்லக் கூடிய தனிமனிதனை போற்றுவதா என்ற கேள்விகளுக்கும் புதினங்களுக்கும் விடை அவரவர் மனமே. மனம் உயர உயர பல பல புதினங்களுக்கும் விடை காணலாம். இத்தகைய விடைகள் அவரவர் மனதின் உயர்வைப் பொறுத்து மாறுபடும். இருப்பினும் மனதின் விரிவுதனை தான் அறிந்து கொள்வதும் தேவையே!

போற்றுவது என்றால் என்ன எனும்போது தன்னிடமுள்ள அறிவைக் கொண்டு அடி முதல் முடி வரை அனைத்தையும் சிந்தித்தால் பல அற்புதங்கள் கண்ணுக்கு புலப்படும். இந்த அற்புதங்களை செய்தது யார் என வினவினால் அதில் பல விளக்கங்களும் மேலும் பல அற்புதங்களும் புலப்படும். இந்த அற்புதங்களுக்கான காரணத்தை அறிய முயலும்போது மேலும் பற்பல அற்புதங்கள் அறிவுக்குக் காட்சியாகும். இத்தகு அற்புதங்களையும், அழகினையும், அறிவையும், அருளையுமல்லவா இந்த உடல் பெற்றுள்ளது ! என்பதை உணர்ந்தேயாக வேண்டும். அவ்வாறு உணரும் போது இந்த மனித தேகம் என்ற உடலுக்கு

நன்றி பாராட்டிட வேண்டிய கடமை தோன்றும். அவ்வாறு அருள் அறிவோடு இவ்வுடலை பார்த்து, உணர்ந்து, வாழ்த்தி, பேணி, பாராட்டி, பாதுகாத்து மகிழும் ஒரு பாங்கே இங்கு போற்றுதலாக மதிக்கப்படுகிறது. உடலை போற்றுவதா அல்லது மனிதப் பிறவியை போற்றுவதா? போற்றி செய்வது என்பது சிந்தைதனில் தெளிவு இல்லாதவர்களுக்கு கைகூடுவது இல்லை. சிந்தைதனில் முதலில் தெளிவு தேவை. தெளிவான சிந்தையினையும், அறிவையும் முதலில் ஏற்படுத்திட வேண்டும். சிந்தைதனில் தெளிவு பெற, சிந்தையில் தெளிவு பெற்றோரது உதவி அல்லது உறவு தேவைப்படுகிறது.

இச்சிந்தனை தெளிவுபெற்றோரை குரு என்கின்றோம். குருவின் நெறியினை பயில வேண்டும், குருவின் வழியில் நிற்க வேண்டும், குருவின் நெறியில் வாழ வேண்டும். குரு - சிஷ்ய பாவனை என்பது மேன்மையானது ஆகையால் அதனைக் காத்திட பழகிக்கொள்ள வேண்டும்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

- திருமந்திரம்.

அறிவிலும், மனதிலும் தெளிவு தேவை. தெளிவில்லா மனதைக் கொண்டோ அல்லது தெளிவு இல்லா அறிவைக் கொண்டோ போற்றுதல் எனும் உயர்ந்த காரியத்தினுள் செல்லவே முடியாது. போற்றுதலுக்குள் உள்ள தெய்வீகத்தையும் அன்பையும் உணரவே முடியாது. போற்றுதலால் உலகு காணும் பயனையும்கூட ருசிக்கவோ சுவைக்கவோ முடியாது.

ஆக அடிப்படையாக நமக்குத் தேவைப்படுவது போற்றுதல் செய்வதற்குண்டான அறிவும் மனமுமேயாகும்.

யாரைப் போற்றிப் பழக வேண்டும்?

முதலில் சொன்னதுபோல தன்னைப் போற்றுதல், தன் பிறவியைப் போற்றுதல், தன் பிறவிக்குக் காரணமான பெற்றோரை போற்றுதல், தனது அறிவைப் போற்றுதல், தன் அறிவின் சிறப்பைப் போற்றுதல், தன் உடலைப் போற்றுதல், தன் உடலுக்குள் இயங்கும் சக்தியைப் போற்றுதல், தன் உடல் உள் உறுப்புகளைப் போற்றுதல், உள் உறுப்புகளின் இயக்க ஒழுங்கினைப் போற்றுதல், தன் சுவாசத்தைப் போற்றுதல், தான் உண்ணும் உணவு சக்தியாக மாறும் விந்தையினைப் போற்றுதல், ஒவ்வொரு உறுப்பினையும், அது அமைந்துள்ள விதத்தினையும் போற்றுதல் என்று முதலில் தன்னை போற்றிப் பழகிக் கொள்வதே உத்தமமும் சிறப்புமாகும். தன்னை போற்றிடக்கூறும் ஒரு திருமேனியை குருவாக ஏற்றுக் கொண்டால் அறிவிலும் மனதிலும் அவசியம் தெளிவு வரும். இதைத்தான் திருமந்திரம் நமக்கு உரைக்கின்றது.

அறிவுப் பயணத்தில் சிறக்க வேண்டும் என நினைத்து வேட்கை கொள்பவன் - இங்கு சீடன் என அழைக்கப்படுகிறான்.

அறிவுப்பயணத்தில் அறிவின் முழுமையை அல்லது பூரணத்தை அடைந்து உணர்ந்தவர்கள் இங்கு குருவாக மதிக்கப்படுகிறார்கள்.

இருவருமே மனித தேகம் கொண்டு வாழ்ந்து வருபவர்களே. ஆகவே உடல், உயிர், மனம், அறிவு இவையாவும் இவர்கள் இருவருக்குமே உண்டு என்பதால் இருவரும் இணைந்தே இறை நிலையிடம் விண்ணப்பம் செய்கின்றனர்.

ஸ ஹ நாவவது । ஸ ஹ நௌ புநக்து ।

ஸ ஹ வீர்யம் கரவாவஹை ।

தேஜஸ் விநாவதீதமஸ்து மா வித்விஷாவஹை ।

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

போற்றுவதில் துவங்கும் இந்த அறிவுப் பயணம் அறிவை அறிவித்தவனை போற்றுவதாய் மலர்ந்து, அதே அறிவே, காலமாகவும், அதிர்வாகவும், இயற்கையாகவும், சீவனாகவும், கோள்களாகவும் நட்சத்திரங்களாகவும் மாறி அறிவே பிரபஞ்சமாகவும், அனைத்துமாகவும் உள்ள விந்தையினுள் இருக்கும் அன்பினை அறிந்துக்கொள்ளும் வரையிலும் தொடர்கின்றது. இந்த புனிதப் பயணம் நிறைவு பெற எடுத்துக் கொள்ளக்கூடிய காலம் ஓராண்டா அல்லது நூறு ஆண்டுகளா என்பது அளக்க முடியாத ஒரு விந்தையாகவே உள்ளது. எத்தனை ஆண்டுகள் ஆனாலும் சரி! எத்தனை பிறவிகள் ஆனாலும் சரி! இறைவா! இறை நிலையே! அன்பினுக்கன்பே! அறிவினுக்கறிவே! எங்களை (நாங்கள்) ஒருவரையொருவர் வெறுக்காமல் இருப்போமாக! என்றே துவங்குகின்றது குரு சிஷ்ய பாவமும் பாடமும். மேற் கூறிய சாந்தி பாடலின் விளக்கத்தில் ஒரு தெளிவும் உறவும் தேவை. இதுவே இப்பாடத்தில் தாங்கள் தேறவேண்டிய இலக்குமாகும்.

கற்பகதரு ட்ரஸ்ட்

1. குரு திருமேனியை காண்டல்
2. குரு - சிஷ்ய பாவம்
3. இறை நிலையோடு கூடிய விண்ணப்பம்
4. தன்னை போற்றும் தகைமை
5. குரு - சிஷ்ய பால இணைப்பில் வாழ்வதில் தேர்ச்சி.

கிரந்தாலயம்

யோக நிலையில் -ஆன்ம சாதனை என்பது முற்றிலும் அறிவு நிலையின் தன்மாற்றக் கலையே என்பதில் தெளிவு தேவை. அறிவே அறிவை அறியவும், அறிவே அனைத்துமாய் உள்ளதையும், அறிவினுக்குள் உள்ள அன்பினை அறிவு உணர்ந்திடவும், அறிவு அன்பாய் மலர்ந்திடவும், மலர்ந்த அன்பு மணம் வீச வேண்டிட உதவும் தன்மாற்றக் கலையே ஆத்மன்.

சாதனை செய்வோம் - அன்பில் மலர்வோம்.

அன்பர்களே!

சித்தர்கள் நெறி - சீரிய நெறி - செம்மையான நெறி. பயில்வோம்... பயன் பெறுவோம்.

உலகிலே சாந்தி நிலவ வேண்டும்!

ஆத்ம சக்தி ஓங்க வேண்டும்!

குறிப்பு: 1. பாடப்பகுதிகளில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் "ஆத்மன்" பயிற்சி வகுப்புகளில் கலந்து விளக்கம் பெற வேண்டுகின்றோம்.

2. பயிற்சி பாடங்களைத் தாங்கள் பயின்று மேல் தெளிவு ஏதேனும் பெற்றால் கடிதம் மூலம் எங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டுகின்றோம்.

3. தங்களது கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.

பாடம்: 2 - "அடிப்படை" - சிந்தனைக்காக

1. போற்றுதல் - யாரைப் போற்றுவது
2. குரு - சிஷ்ய உறவைக் காப்பது
3. தன்னைப் போற்றுவது.

கற்பகதரு டிரஸ்ட்

மனப்பாடப் பகுதி

1. சாந்தி பாடல் 2. திருமந்திரம்

பயிற்சி

1. தினசரி உறங்கச் செல்லும் முன் குறைந்த பட்சம் 10 நிமிடங்களாவது தன்னைப் போற்றிட பழகிக்கொள்ளுதல்.

கிரந்தாலயம்

நினைவில் கொள்க:

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒரு பாடம் என்ற வகையில் இத்தொடர் இரண்டாவது பாடமாகிறது. இந்த மூன்று மாதங்களில் பாடத்திலும், மனப்பாடப் பகுதிகளிலும் தேர்ச்சி பெற வேண்டாமா? முயற்சி தேவை... காலம் உங்கள் கைவசம்.

தவம் 16.05.2015

"மனம் எதற்கு துன்பப்படுகின்றது என்று ஆராய்ந்தாலும் தெளிவு பெறுவதில்லை. நீ துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாய். உன் துன்பத்திற்குக் காரணம் என்ன என்று கேட்டால் சொல்வதற்கு இதுதான் காரணம் என்று ஒன்றும் இல்லை. இந்த துன்பம் எங்கேயிருந்து வருகின்றது? ஏன் வருகின்றது? இவ்வாறு மனதை இறுக்கி பிசைந்து வரும் துன்பத்தில் தான் கர்மவினைகள் கழியுமா? இதற்கு வேறு வழியே இல்லையா? மனதில் துன்பம் வந்தால் செல் சிதைவு ஏற்பட்டு அது உடல் துன்பமாகிறது. இதுவே உடலில் நோய் வந்தால் மனம், 'எனக்கு ஆரோக்கிய குறைவு' என்று வருந்துகிறது. துன்பம் தெரிந்து நோய் வருகிறதா இல்லை நோயிலிருந்து துன்பம் வருகிறதா? இரண்டில் எது வந்தாலும் அழிவது என்னமோ இந்த உடல்தான். இப்போது கர்மவினைகளை அழிப்பது யார்? உடலா, மனமா, உயிரா, அறிவா இல்லை ஆன்மாவா? ஆன்மா என்பது இறைவன். இறைவன் ஒரு போதும் தவறு செய்யமாட்டான். ஆன்மா என்பது புனிதம். அது ஒருபோதும் துன்பப்படுவதில்லை. எனில் துன்பப்படுவது இங்கு யார்?

நான் என்றால் இங்கு யார்? உடல், மனம், அறிவு இவற்றை ஆட்சி செய்வது யார்? கருமையப் பதிவு என்றால் என்ன? அது எங்கு புதைந்து இருக்கும்? இம்மனம் மகிழ்ச்சியாய் இருக்கும்போது மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றது, ஆனால் முடிவதில்லை. அதே மனம் வருத்தத்தில் இருக்கும் பொழுது அதிலிருந்து வெளி வர பார்க்கிறது. அதுவும் முடிவதில்லை. எதுவும் செய்ய முடியாத இந்த மனதை நம் நண்பன் என்று சொல்லிக் கொள்ள என்னால் முடிவதில்லை. உயிர் என்பது உறுப்பு இல்லை. மனம் என்பது ஒரு அலை.

அறிவு என்பது என்ன? அது எங்கே இருக்கின்றது? .. கரு என்றால் உயிர். உயிரின் அலையே மனம். மூளையிலிருந்து வெளிப்படும் ஒரு தெளிவான கருத்தே அறிவு என்று வைத்துக்கொள்ளலாமா? ஆன்மா என்று சொல்லப்படும் ஒன்று இந்த உடலுக்குள் எப்பொழுது பிரவேசிக்கின்றது? அது எப்பொழுது வெளியே செல்லுகின்றது? இந்த உடலில் அது எங்கே இருக்கின்றது? அது காணக் கூடிய பொருளா அல்லது அலையா அல்லது உறுப்பா? இவ்வளவு ரகசியம் நிறைந்திருக்கின்ற இந்த உடலைப் பற்றி அறிய ஆசையாக உள்ளது. ஆன்மாவை காண மிகவும் ஆர்வமாகவும் ஆசையாகவும் உள்ளது. என்னால் காணமுடியுமா? முயற்சிப்பேன்...” வாழ்க வளமுடன்.

- பவானி ஆத்மன் அன்பரின் அகக்கண்ணாடியிலிருந்து...

நிகழ இருப்பவை - ஞானத்திருக்கோயில், குருநாதபுரம்

தொண்டர்களுக்கான பயிற்சி

01.04.2016 முதல் 03.04.2016 வரை

03.06.2016 முதல் 05.06.2016 வரை

விபரங்களுக்கு : 97908 89393

ஆத்மன் - ஆன்மநல மேம்பாட்டுப் பயிற்சி

யோகி. P. காளிமுத்து அய்யா, திருப்பூர், 96982 36878

07.05.2016 முதல் 08.05.2016 வரை

18.06.2016 முதல் 19.06.2016 வரை

ஆத்மன் - ஆன்மநல மேம்பாட்டுப் பயிற்சி

யோகி. S. நளினி அம்மா, சென்னை, 97909 40231

14.05.2016 முதல் 15.05.2016 வரை

25.06.2016 முதல் 26.06.2016 வரை

ஆத்மன் - ஆன்மநல மேம்பாட்டுப் பயிற்சி

யோகி. N. மீனா அம்மா, திருப்பூர், 94432 65924

21.05.2016 முதல் 22.05.2016 வரை



சில வரிகள் சில வழிகள்

- Dr. S. கண்மணி M.D.

குழந்தைகளும் மனவளர்ச்சியும்

அன்பர்களே!

குழந்தை நலன் குறித்த இத்தொடரில் குழந்தைகளின் மனவளர்ச்சி குறித்து சில தகவல்களைக் காண்போம். குழந்தைகளின் மனவளர்ச்சி மற்றும் மேம்பாடு என்பது எண்ணம், மொழி, கற்றுக்கொள்ளும் திறன், புலனறிவு, மனோபாவம் ஆகியவற்றில் காலத்திற்கு ஏற்ப நிகழும் மாற்றங்களைப் பொறுத்தது.

அறிவியல் பூர்வமாக குழந்தைகளின் மன வளர்ச்சி மேம்பாடிற்கான அடிப்படை கோட்பாடுகள் ஐந்து. அவையாவன:

1. நரம்பியல் சார்ந்த மேம்பாடு
2. கற்றுக்கொள்ளும் திறன்
3. முரண்பாடிற்கான தீர்வு
4. புலனுணர்வு கோட்பாடு
5. கலாச்சாரம் மற்றும் சுற்றுப்புற சூழல் சார்ந்த வளர்ச்சி

கற்பகதரு ட்ரஸ்ட்
கிரந்தாலயம்

1. நரம்பியல் சார்ந்த மேம்பாடு

குழந்தைகள் உடல் அளவில் வளர, வளர அவர்களது மூளை மற்றும் நரம்பியல் மண்டலமும் வளர்ச்சி அடைந்து, முதிர்வு அடைவதோடு அவற்றில் தன்னிலை மாற்றமும் நிகழ்கிறது. இவை குழந்தைகளின் மனவளர்ச்சி, நடத்தை, ஒழுக்கம் போன்றவைகளுக்கு உதவியாய் உள்ளன.

2. கற்றுக்கொள்ளும் திறன்

குழந்தைகள் தான் செய்யும் செயலுக்குக் கிடைக்கும் வெகுமதி அல்லது தண்டனையினை பொருட்டு ஏற்படக்கூடிய மனவளர்ச்சி.

3. முரண்பாடிற்கான தீர்வு

வெவ்வேறு சூழ்நிலைகளில் குழந்தைகளின் மனதிற்குள்ளாகவே ஏற்படும் முரண்பாடுகளுக்கு தாமாகவே தீர்வு காணும் போது ஏற்படக்கூடிய மனவளர்ச்சி.

4. புலனுணர்வு கோட்பாடு

ஒரு குழந்தை தன்னை சுற்றி உள்ள புற சூழலிலிருந்து தகவல்களை உட்கிரகித்துக் கொண்டு, மனதை தன் தேவைக்கும் சுற்றத்திற்கும் ஏற்றாற்போல் மாற்றி இணங்கிக்கொள்ளக்கூடிய மனவளர்ச்சி.

5. கலாச்சாரம் மற்றும் சுற்றுப்புற சூழல் சார்ந்த வளர்ச்சி

இந்த கோட்பாட்டின்படி ஒரு குழந்தை எந்த விதமான கலாச்சாரம் மற்றும் சுற்றுப்புற சூழலுக்கு உள்ளாக்கப்படுகிறதோ அதற்கேற்ப ஏற்படக்கூடிய மனவளர்ச்சி.

குழந்தைகளிடையே உள்ள மனநிலை வேறுபாடுகளைப் பொறுத்து அவர்களை மூன்று விதமாக பிரிக்கலாம்.

1. எளிதில் பண்படுத்தக்கூடிய குழந்தைகள்

பொதுவாக இந்த வகையான குழந்தைகள் எந்த வகையான

சூழ்நிலைகளிலும் தங்களை எளிதில் மாற்றி அமைத்துக் கொள்ளக்கூடிய திறன் பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்களை சீரான நெறிமுறைக்கு கொண்டு வருவது மிகவும் சுலபம்.

இவ்வகை குழந்தைகள்,

- புதிய உணவுவகைகளை எளிதில் ஏற்றுக்கொள்வர்.
- புதிய நபர்களைப் பார்த்து சட்டென்று புன்முறுவல் செய்வர்.
- வளரும் பருவத்திலும் புதிய மனிதர்களிடமும் நண்பர்களிடமும் சுலபமாக கலந்துகொள்வர். பள்ளி சேர்க்கும் பருவத்திலும் அதிக போரட்டம் இராது.
- புதிய விதிமுறைகளையும் ஏமாற்றங்களையும் எளிதில் ஒப்புக்கொண்டு பெரும்பாலான சூழ்நிலைகளில் நிறைவான கண்ணோட்டத்துடன் திகழ்வர்.

2. எளிதில் பண்படுத்த முடியாத குழந்தைகள்

எந்த விதமான மாற்றங்களையும் இவர்களால் சட்டென்று ஏற்றுக்கொள்ள முடியாது. பல போராட்டங்களுக்குப் பிறகே இவர்களால் மாற்றத்தை ஒத்துக்கொள்ள முடியும். இவ்வகை குழந்தைகள்,

- சிறு வயது முதலே பசி, தூக்கம் ஆகியவற்றில் ஒழுங்கற்ற நிலையில் காணப்படுவர்.
- புதிய உணவுவகைகளை எளிதில் ஏற்கமாட்டார்கள்.
- புதிய மனிதர்களைக் கண்டால் அதிக அச்சம் கொள்வர்.
- அடிக்கடி உரத்த குரலில் தொடர்ந்து அழுவர்.
- பள்ளி சேர்க்கும் பருவத்தில் அதிகம் முரண்டு பிடிப்பர். இது போன்ற குழந்தைகளை கையாள்வதில் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் மிகுந்த பொறுமையைக் கையாள வேண்டும்.

கற்பகதரு டிரஸ்ட்
கிரந்தாலயம்

3. மெதுவாக பண்படக்கூடிய குழந்தைகள்

இவ்வகை குழந்தைகள்,

• சூழ்நிலை மாற்றத்தை உடனடியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அடிக்கடி தூண்டுதல் கொடுத்தால் மெதுவாக, இயல்பாக மாற்றத்தை ஒப்புக் கொள்வர். ஆனால் இவர்களிடம் முரண்டு பிடிக்கும் தன்மை அவ்வளவாக இருக்காது.

• கற்றுக்கொள்ளும் தன்மையில் சிறிது மந்தமாக இருப்பர்.

• இவர்களை மற்ற குழந்தைகளுடன் ஒப்பீடு செய்யாமல் ஊக்கம் அளித்தால் சிறந்த தனி மனிதர்களாக உருவாக்கலாம்.

எந்தவொரு குழந்தையையும் மேலே குறிப்பிட்டுள்ள மூன்று வகைகளுக்குள் கச்சிதமாக பொருத்துவது அரிது. பெரும்பாலான குழந்தைகள் மேற்படி வகைகளின் கூட்டமைப்பு மற்றும் வேறுபாடு கொண்டவர்களாகவே திகழ்வர்.

குழந்தைகளின் மனவளர்ச்சி என்பது பிறந்தது முதலே தொடங்கி இடைவிடாது நடந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்வுமுறையாகும். குழந்தைகளது ஒவ்வொரு காலகட்ட

வளர்ச்சியிலும் நாம் புரிந்து கொள்ள வேண்டிய கோணங்கள் மற்றும் அந்தந்த வயதிற்கேற்ப ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் அதற்கான தீர்வுகளைப் பற்றி இனி காணலாம்...

பிறந்தது முதல் ஒன்றரை வயது (18 மாதங்கள்) வரை

பிறந்த குழந்தையானது,

1) லேசான தூக்கம்,

2) ஆழ்ந்த தூக்கம்,

3) கண்ணயர்ந்த நிலை,

4) மந்தமான விழிப்பு நிலை,

5) சுறுசுறுப்பான விழிப்பு நிலை மற்றும்

கற்பகதரு டிரஸ்ட்
கிரந்தாலயம்

6) அழுவது என்ற ஆறு மனோநிலைகளில் சுழற்சி முறையில் இயங்கி வரும்.

இந்த ஒவ்வொரு நிலையிலும் குழந்தை இருக்கும் நேரம் மாறிக்கொண்டேயிருக்கும். நாளாக நாளாக, பெற்றோர்களாலும், காப்பாளர்களாலும் இவற்றை ஓரளவு கணிக்க முடியும்.

குழந்தைகளுக்கு ஆறு மாதங்கள் ஆகும் பொழுது பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டி போன்று தன்னிடம் அன்றாடம் இருப்பவரிடம் ஒரு இணக்கம் உண்டாகிவிடும். சிறிது நேரம் இவர்களை விட்டுப் பிரிந்தால் கூட குழந்தை அழத் தொடங்கிவிடும். மேலும் புது மனிதர்களைக் கண்டால் திரும்பிக்கொள்வதும், அழுவதும், தெரிந்த நபர்களைத் தேடி ஓடுவதும் ஏற்படும். சில குழந்தைகளுக்கு அழுகை அதிகமாகி வாந்தி கூட ஏற்படலாம். வீட்டில் உள்ள பெரியவர்களிடமோ அல்லது காப்பகங்களிலோ குழந்தைகளை விட்டுவிட்டு வேலைக்கு செல்லும் தாய்மார்களுக்கு இந்த பிரச்சனையை கையாள்வதில் சிக்கல் ஏற்படலாம். இதற்கு பொறுமையான உத்தி முறையை பின்பற்ற வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளை விட்டு பிரியும் காலத்தை படிப்படியாக அதிகரித்தால் அவர்கள் எளிதில் அனுசரித்து பழகிக்கொள்வர்.

திரும்ப திரும்ப செய்யும் பழக்கங்கள்

குழந்தைகளுக்கு ஆறு முதல் பத்து மாதங்கள் வரை கீழ்காணும் செயல்களை மீண்டும் மீண்டும் செய்யும் பழக்கம் ஏற்படலாம். அவர்களுக்கு களைப்பு ஏற்படும் பொழுதோ, அலுப்பு தட்டும் பொழுதோ, கோபம் அல்லது ஏமாற்றம் ஏற்படும் பொழுதோ இவற்றை செய்ய ஆரம்பிக்கலாம்.

1. உடம்பை உலுக்குவது - உட்கார்ந்த நிலையில் உடலை முன்னாலும் பின்னாலும் சீராக ஆட்டுவது.

2. தலையை முட்டிக்கொள்வது - ஏதேனும் திடமான பரப்பில் தலையை ஒரே சீராக முட்டிக்கொள்வது.

கற்பகதரு டிரஸ்ட்
கிரந்தாலயம்

தீர்வு:

அந்த நேரத்திற்கு அவர்களை திசை திருப்பினாலே போதுமானது.

முக்கியக்குறிப்பு:

மேற்கண்ட இரண்டு பழக்கங்களாலும் குழந்தைகளுக்கு காயம் ஏற்படும் அபாயம் உள்ளதால் பெற்றோர்கள் குழந்தைகளை பாதுகாப்பான இடங்களில் அமர்த்துவதோடு, எப்பொழுதும் அவர்களுடைய செயல்பாடுகளில் கவனம் வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவுக்கு மீறிய அக்கறை அல்லது தண்டனை அளித்தால் இந்த பழக்கம் மேலும் வலுவாகத்தான் வாய்ப்பிருக்கிறது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

3. அழுகையால் மூச்சு நின்று மயக்கம் அடைவது

இது ஆறு முதல் பதினெட்டு மாதங்கள் வரை ஏற்படலாம். குழந்தைகள் கோபம் அல்லது ஏமாற்றம் அடையும்போது அழ ஆரம்பித்து அதுவே மிகவும் அதிகரிக்கும்போது சிலருக்கு மூச்சு திடீரென்று நின்று அவர்கள் மூர்ச்சை அடையலாம். சில வினாடிகளில் நினைவு திரும்பி விடும்.

முக்கியக்குறிப்பு:

இது முதல் முறை நிகழும்பொழுது பெற்றோர்கள் தம் குழந்தைகளை மருத்துவரிடம் அழைத்துச் சென்று அவர்களுக்கு வலிப்பு அல்லது இருதயம் சம்பந்தப்பட்ட தீவிரமான நோய் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அடிக்கடி இந்த மாதிரி நிகழ்வுகள் ஏற்படும்பொழுது பெற்றோர் பதற்றம் அடையாமல் அமைதியான மனோபாவத்தோடு இதை எதிர்கொள்ள வேண்டும். அதே சமயம் அதிகமாக கவனம் செலுத்தினாலும் இந்த பிரச்சினை அடிக்கடி நிகழ வாய்ப்புள்ளது.

தீர்வு:

அடுத்த முறை இது நிகழாமல் தவிர்க்க ஆரம்ப நிலையிலே அவர்களை சமாதானப்படுத்தி திசை திருப்பலாம்.

குளிர்ந்த நீரில் ஈரம் செய்த துணியை நெற்றியில் வைத்தால் மூர்ச்சை ஆவதை தவிர்க்கலாம்.

மேலும் சிந்திப்போம் ... நலம் நலமறிய அவா...■

ஞானத்திருக்கோயில் - பயிற்சி - கால அட்டவணை		
நேரம்		நிகழ்வு
காலை	5.30 - 6.00	தவம் (மோனாலயம்)
	6.00 - 7.00	கரசேவை
	7.00 - 7.30	உடற்பயிற்சி
	7.30 - 10.00	குளியல் மற்றும் காலை உணவு
	10.00 - 11.30	சத்சங்கம்
	11.30 - 11.45	தேநீர்
நண்பகல்	12.00 - 12.30	தவம் (மோனாலயம்)
மதியம்	12.30 - 1.30	சத்சங்கம்
	1.30 - 3.00	உணவு மற்றும் ஓய்வு
மாலை	3.00 - 4.15	சத்சங்கம்
	4.15 - 4.30	தேநீர்
	4.30 - 5.30	கரசேவை
	6.00 - 7.00	தவம் (மோனாலயம்)
இரவு	7.00 - 8.30	உணவு மற்றும் ஓய்வு
	8.30 - 10.00	சத்சங்கம் - ஐயம் தெளிதல்
	10.00 - 10.10	மோனாலயம் - திருவலம்
	10.15	யோகநித்திரை



மதி

ஸ்ரீ குரு கனக கோவிந்தசாமி அய்யா அவர்களின் உரைக்கு எழுத்து வடிவம் கொடுத்தவர் திருமதி. S. செல்வி அவர்கள்.

அன்பர்களே!

மதின்னா என்ன?

மதியென்றால் சந்திரன் என்று ஒரு அர்த்தம் உண்டு. மனம் என்று கூட மதி என்ற வார்த்தையை பயன்படுத்துவது உண்டு. மதிப்பு என்பதைக் கூட நாம் மதி என்று எடுத்துக் கொள்ளலாம். அதாவது மதித்தல் என்பதனுடைய பகுதி மதி.

மனம் தான் அறிவா இருக்கு, அறிவு தான் மனமா இருக்கு, இரண்டும் வேறு வேறு இல்லை. இருக்கக் கூடிய சிறப்பை வைத்து அதற்கு பெயர் மாற்றப்படுகிறது. அறிவிலேயே ஒரு சிறந்த அறிவு இருக்கிறது. அது என்னன்னா, அறிவு என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளக் கூடிய அறிவு.

மதியைக் கொண்டு தவம் செய்யணும், அறம் செய்யணும் இந்த தவமாகப்பட்டது பழைய பாவம் (நாம் பரம்பரையாக செய்தவை)

எல்லாம் போக்கும். பாவத்தை முற்றிலுமாக போக்குவதை நிர்மூலம் என்று சொல்வார்கள். அதாவது மொட்டையா சொன்னா பழைய பாவத்தை எல்லாம் கழிப்பது. அந்த நிர்மூலத்தை நாம் பக்தி மார்க்க நெறியிலே சரணாகதி மூலம் அடையலாம் என்று சொல்வார்கள். இந்தக் காலத்துல இறைவனை சரணாகதி அடையற அளவுக்கு பக்தி, பூஜை, புனஸ்காரம் செய்வதற்கு சொல்லிக்கொடுக்கவும் ஆளில்லை, செய்யவதற்கும் ஆளில்லை, அதற்கு நேரமும் இல்லை. ஆனால் சரணாகதிக்கு பதிலாக வேறொரு வழியிருக்கு... அதுதான் தவம். தவம்னா இறைவனோடு சேர்ந்திருப்பது. அதுக்கு ஒரு கதை சொன்னாங்க பாருங்க...

மார்க்கண்டேயனுக்கு வயசு பதினாறானப்ப, எமன் பாசக் கயித்தை எடுத்துட்டு வந்துட்டாரு. சின்னப்பையன் மார்கண்டேயன் பயத்துல சிவலிங்கத்தை கட்டிபிடிச்சுட்டான். எமன் ரெண்டையும் சேர்த்து பாச கயித்தைப் போட்டுட்டாரு. இழுக்க முடியுமா? இழுக்க முடியலை.

இதிலிருந்து என்ன தெரியுது? இறைவனோடே சேர்ந்து இருந்தா பதிவு வேலை பண்ணாது, அதுதான் தவம். இறைவனோடு சேர்ந்தே இருப்பதுதான் தவம். துரியாதீதத்தைத் தெரிந்துகொண்டு, நல்ல விதமாக செய்து, அதிலேயே ஆழ்ந்து, லயித்து இறைவனோடே சேர்ந்து தவம் செய்தபடியே இருக்கணும். ஆனால் எப்பவுமே இறைவனோடேயே இருந்து கொண்டிருக்கணும், அப்பத்தான் பாசக் கயிறு கூட உங்க மேலே விழாது. அது தான் தவம். ஆனால் எல்லாத்துக்கும் **அறமும்*** துணை செய்யணும். அறத்தினுடைய துணை இருந்தால் மட்டுமே தவம் செய்யமுடியும். பாவம் செஞ்சுட்டு தவம் பண்ணி தப்பிச்சுக்கலாம் என நினைக்க வேண்டாம், அறம் செய்தால்தான் தவமே செய்யமுடியும். அறத்தினுடைய துணை இல்லாமல் தவம் வேலை பண்ணாது. எதை செய்தாலும் அறத்தினுடைய துணை இல்லையென்றால், தவம் கைகொடுக்காது.

இதையே திருமூலர்,

“திளைக்கும் வினைக்கடல் தீர் வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு;
கிளைக்குந் தனக்கும் அக் கேடில் புகழோன்
விளைக்குந் தவம் அறம் மேற்றுணை யாமே.”

என்று திருமந்திரத்தில் கூறுகிறார்.

கம்பராமாயணத்தில் இராவணனைப்பற்றி “எவ்வளவு தவம் செஞ்சே நீ! எத்தனை ஆயிரம் வருஷம் தவம் செஞ்சே! ஒரு தவம் கூட உனக்கு உயிரை காபந்து பண்ணி (காப்பாத்தி) கொடுக்கலையே!” னு மண்டோதரி சொல்லி அழுகிறமாதிரி ஒரு வாக்கியம் வரும்னு சொல்லுவாங்க. அவ்வளவு தவமும் நல்ல புத்தியை(அறம் செய்ய) கொடுத்திருந்தா தவம் துணையா நின்றிருக்கும். அறம் தான் தவத்தை விட வலிது. ஏனென்றால், தவம் செய்தாலும் அறம் இல்லையென்றால் தவம் பயனற்று போகும். ஆக நல்ல வாழ்வு வேணும்னா, இன்பமான வாழ்வு வேணும்னா, தவமும் அறமும் துணை நிற்க வேண்டும். வாழ்க்கையிலே வெற்றி வேணுமா? இன்பம் வேணுமா? அறம் செய்யுங்க - அறம் செய்தால் தவம் கிட்டும். தவம் கிட்டினால் இறைவன் உங்களோடேயே எப்போதும் இருப்பான். வெற்றி மேல் வெற்றி பெறலாம். இதற்காக உங்களது அறிவை - மதியை பயன்படுத்தலாமே..!

- நினைவில் உங்களோடு *kgs.* ■

*விளக்கம்: அறம்

1) பிறருக்கு துன்பம் தராமல் இருத்தல் 2) தினசரி நன்றி பாராட்டி வாழ்தல் 3) எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவுதல்.

குரு கனக கோவிந்தசாமி அய்யா அவர்களின் நினைவு நாள் 2.5.2016. இதனை சிறப்பிக்கும் விதமாக 1.5.2016 அன்று குருநாதபுரத்தில் குழந்தைகளால் மரம் நடும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

வேத வேர்கள்

உமது கூடாரம் சமாதானத்தோடு இருக்கக் காண்பீர்.
வாசஸ்தலத்தை விசாரிக்குபோது குறைவைக் காணமாட்டீர். (யோபு - 5:24)

அன்பு நிறைந்தோரே!

வேத வேர்களின் மூலம் நாம் மீண்டும் சந்திக்கின்றோம். "ஆத்மன்" பயிற்சிகள் யாவும் ஆங்காங்கே சிறப்பாய் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குருநாதபுரம் மோனாலயத்தினை உலகிற்கு சமர்ப்பணம் செய்யும் திருச்சடங்குகள் யாவும் கடந்த 21.1.2016 முதல் 24.1.2016 வரை இனிதே நடைபெற்றன. இதில் பொள்ளாச்சி வாகை அறக்கட்டளையினைச் சார்ந்த ஸ்ரீ சிவனேச அடிகளார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். மோனாலயம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப அழகுற அமைந்துள்ளது. உலக சமாதானத்திற்காக மௌனம் இயற்ற வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட அருட் திருக்கூடமே மோனாலயம்.

குருமார்கள் கண்ட கனவுகளை நிறைவேற்றியது போன்ற உணர்வே இந்த நிகழ்வின் இறுதிப் பகுதியில் பலருக்கும் கிடைத்ததாக அறிய முடிந்தது. பல மூலிகை மரங்களையும், மூலிகை புல் செடிகளையும் மோனாலயத்தைச் சுற்றிலும் அமைக்க வேண்டும். அதற்காக மண்ணை பதப்படுத்தும் செயல்கள் தக்க காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மோனாலயம் - மோனத்திற்காக மட்டுமே

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனம்முடைக் கல்வியி லோரே.

- திருமூலர் - திருமந்திரம்.

திருமூலரின் கூற்றுபோல மோனாலயம் உள்ளத்தினுள் உள்ள தீர்த்தங்களில் நீராட உதவி செய்யும்.

உள்ளத்தினை கண்டடைவீர்.
உள்ளத்தினுள் உறவாடுவீர்.
உள்ளத்தினை அடைந்திடுவீர்.
உள்ளத்தினுள் வாழ்ந்திடுவீர்
உண்மை தெய்வத்தினை தரிசனம் செய்வீர்.

அன்புடை நெஞ்சகத்தாரே!

அன்பு என்பது ஓடை நீரைப் போல் ஆற்றில் கலந்து கடலில் கரைந்து மழையாய்ப் பொழிய வேண்டும். இதுவே நியதி. அன்புபெனும் மழையில் அனைத்து சீவன்களும் சுகமும் சாந்தியும் பெற வேண்டும்.

அன்பு என்பது குருவின் உணர்வு - அது மொழியல்ல - அது வார்த்தையல்ல. அன்பெனும் உணர்விற்கு மொழி உண்டா எனில் மொழியும் இல்லை, சொல்ல நாவும் இல்லை. அன்பு என்பது

எண்ணமா எனில் அது எண்ணமும் அல்ல.. அருள் உணர்வுகளின் உச்சத்தினில் ஏற்படும் பாலம் அது. அருளாளர்களால் மட்டுமே அதை உணர முடியும், அதில் திளைக்கவும் முடியும். அதனால் அருளாளர்களுக்கு கிடைத்திடும் பேறு துன்பமா? இன்பமா? வலியா? வேதனையா? அருளா? அமுதா?... எனில் இவற்றிற்கெல்லாம் அப்பாலான உணர்வு... அதுவே அன்பு.

இத்தகு அன்பு நிலைக்களமாய் விளங்குவோரே குருமார்கள். அவர்களின் அன்பு உணர்வலைகள் உலகத்திற்கு கொடுத்தவைகளே தத்துவமும், தவமும். அவைகளே வேதங்கள், அவைகளே வேதத்தின் சாரங்கள், அவைகளே வேதத்தின் வேர்கள், அவைகளே வேதமரம்.

சமாதான வீட்டினுள் துணிந்து செல்..

அன்பினில் அடைபடு..

அன்பினில் திளைத்திடு..

அன்பினை விதைத்திடு..

அன்பினில் கனிந்து கரைந்திடு...

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?...

ஏதும் அறியோம் நாம்...

அன்பு நிலை பெற.,

அன்பு நிலைத்திட்ட குருவினைத் தேடி கண்டடைவீர்.

அது ஒன்றே மார்க்கம்.

வேறொன்றும் அங்கு இல்லை.

குருவை அன்பு மையம் எனலாம். அங்கு சாதியில்லை, மதம் இல்லை, பகட்டு இல்லை. அவர் வார்த்தையும் வாழ்வும் அவருக்காகவும் இல்லை. சமாதானத்தை கண்டவர் சமாதானத்தை கொடுத்திட திளைக்கின்றனர்.

தமிழ்நாடு ட்ரஸ்ட் கிரந்தாலயம்

அன்பினை உணர்ந்தவர் அன்பினை உலகிற்கு ஈந்திட அருள் கொள்கிறார். இது ஒன்றே குரு மார்க்கம்... அன்பு ஒன்றே அவரது மார்க்கம். அன்பை உணர்ந்தால் பிரபஞ்சமே அன்பு மயம் என்பதையும் உணர முடியும்.

தேடுங்கள்... கண்டடைவீர். ஆம்! தேடுங்கள்... கண்டடைவீர்.

தேடுதல் என்று கூறும் போது அவரவர் மன நிலை மற்றும் அறிவு சார்ந்த நிலைக்கேற்ப தேடுகின்றீர்கள். நிச்சயம் தேடுவது கிடைக்கும். அது பொன், பொருள், அறிவு, ஆன்மநலம் எதுவாக இருந்தாலும் தேடுவதைக் கண்டடைய முடியும் அல்லது கண்டடையும் வரை தேடுவதும் தொடரும்.

குழந்தைப் பருவம் முதல் கிழப்பருவம் வரை பருவத்திற்கேற்ப எண்ணம், எண்ணத்திற்கேற்ப ஓட்டம்! இவையாவும் எதனை நோக்கி... என்ற கேள்வியை எழுப்பிப் பார்த்தால் தேவை என்ற பதில் வரும்.

- உண்ண உணவு,
- வசிக்க இருப்பிடம்,
- வயது வந்தோர்க்கு வாழ்க்கைத்துணை,
- தன்னை இடர்களிலிருந்து காத்துக் கொள்ளும் தகைமை...

இவையே மனிதனுடைய அடிப்படைத் தேவைகள். இந்த அடிப்படைத் தேவைகளில் தனது கற்பனையை கூட்டிச் சேர்த்து அவையே பின்னர் ஆடம்பர தேவைகளாயின. தேவைகளை பூர்த்தி செய்திட எழுந்த ஓட்டம் பிறகு பணத்தை தேடிய ஓட்டமாக அமைந்து விட்டது.

அன்றாட வாழ்க்கையைப் பாருங்கள், நடந்து... ஓடுபவர், சைக்கிளில் ஓடுபவர் காரில் ஓடுபவர்..., என ஓடிக் கொண்டேயிருக்கின்றார்கள். ஓட்டத்தின் போக்கை அதிகரிக்க ஏற்பட்டது தான் அதிவேக வாகனங்கள். அதனை வாங்கிட

கற்பகதரு ட்ரஸ்ட்
கிரந்தாலயம்

தேவையான பணத்திற்காக ஒடும் கூட்டத்தின் நடுவில் தன்னை அறிந்திட எண்ணம் கொண்டோர்கள் அரிதே! எனினும் இன்று தன்னையறியும் ஆர்வம் கொண்டோரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமேயுள்ளது. வரும் காலங்களில் தன்னையறியும் ஆர்வம் கொண்டோர் எண்ணிக்கை பெருகியேயாக வேண்டும்.

வேதவேர்களில் இதுவரை நாம் உள்ளத்தினை பற்றியும், உள்ளமே சமாதானம் வீற்றிருக்கும் திருஅருள் கூடம் என்பது பற்றியும் சிந்தித்து வந்தோம்.

இனிவரும் தொடர்களில் சமாதானம் குடிகொண்டுள்ள மூலாதாரச் சிறப்பினை பற்றி விரிவாகக் காண்போம்.

மூலாதாரம்

"நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலந்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடியிருந் தானே."

- திருமந்திரம்.

தொடர்வோம் குரு அருள் துணைக்கொண்டு..

உங்களில் ஒருவனாய்,
தொண்டனுக்கும் தொண்டனாய்,
L.L.S. மணிகண்டன்

நிகழ இருப்பவை - சென்னை சேவை மையம்

15.4.2016 அன்று காலை 6.00 முதல் 11.00 மணி வரை
ஸ்ரீ ஞானசாயி நாதருக்கு - பஜனை மற்றும் சிறப்பு வழிபாடுகள்

பிரதி வியாழன் மற்றும் பௌர்ணமி நாட்களில் – சிறப்பு தவம், கூட்டுப்பிரார்த்தனை

பிரதி திங்கள், புதன், வெள்ளி –மாலை 5.00–6.30 மணி வரை – உடற்பயிற்சி, தியானம்

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு வாழ்வில் வளங்கள் பெற

அன்போடு அழைக்கின்றோம். மேலும் தொடர்புக்கு – 97909 17473.

கற்பகதரு ட்ரஸ்ட்

எண்ணிய முடிதல் வேண்டும்

அன்பர்களே!

நமது சமுதாயம் மற்றும் ஆன்மீகப் பணிகள் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகின்றன. இதற்காக உழைத்துக் கொண்டுள்ள அனைத்து தொண்டு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். நடந்த நிகழ்வுகள் சிலவற்றை கீழே காண்போம்.

குருநாதபுரம்

1.1.2016 - உலக சமாதானதிற்கான மௌனம் மற்றும் வேள்வி நிகழ்வு

31-12-2015 முதல் 3-1-2016 வரை	உலக சமாதானதிற்கான மௌனம் மற்றும் வேள்வி
14,15-1-2016	சத்சங்கம்
21-1-2016 முதல் 24-1-2016 வரை	மோனாலயம் (உலக சமாதான ஆலயம்) உலகிற்கு அர்ப்பணிக்கப்பட்ட நிகழ்வுகள்
8,9-2-2016	சத்சங்கம்
21,22-2-2016	சத்சங்கம்
27-2-2016	சத்சங்கம்
6,7,8-3-2016	சத்சங்கம்
11,12,13-3-2016	சத்சங்கம்

24.1.2016 அன்று குருநாதபுரத்தில் மோனாலயம் (உலக சமாதான ஆலயம்) உலகிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்நிகழ்வுகளின் சில காட்சிப்பதிவுகள்.

21.1.2016 - ஸ்ரீ சிவனேச அடிகளார் அவர்கள் - துவக்க நிகழ்வு

21.1.2016 - ஞானதீபம் ஏற்றப்பட்ட நிகழ்வு

24.1.2016 - குருநாதபுரத்தில் மோனாலயம் (உலக சமாதான ஆலயம்) உலகிற்கு அர்ப்பணிக்கப்பட்ட நிகழ்வு

24.1.2016 - அன்னதான நிகழ்வு

சென்னை

பிரதி வியாழன் மற்றும் பௌர்ணமி நாட்களில் சிறப்பு தவம் மற்றும் கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

4.2.2016 - உணவு மற்றும் சீருடை தானம் வழங்கிய நிகழ்வு

திருப்பத்தூர்

4.3.2016 - உலக மகளிர் தின சிறப்புப் பயிற்சி

15.3.2016 அன்று திருப்பத்தூர் சின்ன கடைத் தெரு நகராட்சி தொடக்கப் பள்ளியில் கற்பகதரு ட்ரஸ்டின் திருப்பத்தூர் சேவை மையத்தின் இரண்டாம் ஆண்டு துவக்க விழா நடைபெற்றது. மேலும் இலவச யோகா மற்றும் தியான வகுப்புகள் தினசரி நடைபெற்று வருகின்றன.

பவானி

28.2.2016 அன்று பவானியில் 'ஆத்மன்' யோக வாழ்வுப் பயிற்சி நடைபெற்றது.

- N. மீனாகிருஷ்ணன், திட்ட ஒருங்கிணைப்பாளர் - 94432 65924

கிரந்தாலயம்

நிகழ இருப்பவை - பவானி சேவை மையம்

பிரதி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை

ஆத்மன் – ஆன்ம நல மேம்பாட்டுப் பயிற்சிகள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு வாழ்வில் வளங்கள் பெற அன்போடு அழைக்கின்றோம். **மேலும் விபரங்களுக்கு – 94433 92061, 78458 26602.**

நைமிசாரண்யம்

- M. சௌரிராஜன்

"பாரத நாடு பழம் பெரும் நாடு
நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்."

- மகாகவி பாரதியார்

மண்ணும் - விண்ணும், வாழும் சமூகமும், தென்னையும் - காற்றும், இனிமையும் - ஏகாந்தமும், வளமும் - வாழ்வும் நிறைந்தது நம் பாரத பூமி. இப்பூமிதனில் இன்று வரை உலக சமுதாய நலனுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கும் பல பெரியோர்கள் நமக்காக செய்து வைத்த பணிகளை நாம் சிறிதும் மறக்கலாகாது.

இத்தகைய செயற்கரிய செய்கைகளை செய்தோர்களது புகழ் ஓங்குக! பற்பல ஞானிகளும் சித்தர்களும் ரிஷிகளும் வாழ்ந்த இந்த பாரத பூமியை வணங்குவோம்... வாழ்த்துவோம். நாம் நலமுடன் வாழ இந்த பாரதத்தாய் அனைத்து வளங்களோடும் அமைதியாய், ஆனந்தமாய் வாழ்க... வாழ்க... வாழ்கவே!

"யாகத்திலே தவ வேகத்திலே - தன்
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார்தம்
அருளினிலே உயர்நாடு - இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு" -மகாகவி பாரதியார்.

பாரதம் என்றாலே மகான்கள் தோன்றி அறம் வளர்த்த திருநாடு எனப்படும். இதனை சிறு பெயராக அழைத்தால் "தர்மஸ்தானம்" எனலாம். இத்தகு சிறப்பு பெற்ற பாரதத் திருநாட்டில் பற்பல ரிஷிகள்... ரிஷிகள் என்றால் சுமார் 8,000க்கும் மேற்பட்டோர்கள் வாழ்ந்து, தவமும், வேள்வியும், சாத்திரங்கள் - சூத்திரங்கள் செய்வித்தும், கூடியும், மகிழ்ந்தும் திருஅருளோடு நித்தம் நித்தம் "தனது பணியே இது" என்று வாழ்ந்து வந்த திருநிலையமே நைமிசாரண்யம்.

நைமிசாரண்யம் எங்கே உள்ளது?

பாரத திருநாட்டில் உத்திரபிரதேச மாநிலத்தில் லக்னோவிலிருந்து சுமார் 70 கி.மீ தொலைவில் சீத்தாப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது நைமிசாரண்யம்.

நைமிசாரண்யத்தின் சிறப்பு

கதை - ஒரு சமயம் தவ வலிமையில் உயர்ந்த பல்லாயிரக்கணக்கான முனிவர்கள் குலபதி சௌகனர் தலைமையில் ஒன்று கூடி 12 ஆண்டுகள் செய்யக்கூடிய சத்திர வேள்வியை செய்ய விரும்பினர். அவ்வேள்வியினை செய்திட ஏற்ற ஓர் இடத்தை பிரம்மரிடம் வேண்டி நின்றனர். அவர்களது வேண்டுதலை ஏற்று பிரம்ம தேவர் தர்ப்பை புல்லை ஒரு வளையமாக மாற்றி "இந்த தர்ப்பை வளையம் எங்கே போய் விழுகிறதோ அந்த இடமே சத்திர வேள்வி செய்வதற்கு ஏற்ற இடம்" என்று கூறினார். அவ்வாறே அவ்வளையம் விழுந்த இடத்தில் முனிவர்கள் வேள்வியை துவங்கினர்.

நேமி என்றால் சக்கரம் அல்லது வளையம் எனப்பொருள். ஆரண்யம் என்றால் காடு. நேமி + ஆரண்யம். இதுவே பிறகு மருவி நைமிசாரண்யம் என்று அழைக்கப்படுகின்றது.

தற்போதும் இந்த காட்டில் மரங்கள் என்ற ரூபத்தில் பல ரிஷிகளும், சித்தர்களும் உயிரோடு தம்மை ஐக்கியப்படுத்தி உள்ளனர் என்று உணர்வோரும் உண்டு.

காஞ்சி மகா பெரியவாளுடைய பரம பக்தருக்கு ஒரு மனக்குறை. அவருக்கு காது கேட்காது, புத்தகம் படிக்க முடியாதபடி பார்வை குறைபாடும் உண்டு. அவர் பெரியவாளிடம் "பெரியவா... நான் ராமாயணம், பகவத்கீதை, பதினெட்டு புராணங்கள் எல்லாத்தையும் படிச்சு என்னோட ஜென்மத்தை கடைத்தேத்திக்கணும். ஆனா, என்னால புத்தகம் படிக்க முடியாது, காதாலேயும் கேட்க முடியாது. நான் என்ன பண்ணுவேன்? நீங்கதான் எனக்கு கதி"ன்னு சொல்லி அழுதாராம். அப்போ பெரியவாளை சுத்தி நிறைய பண்டிதர்கள் இருந்தார்கள். பெரியவா.. அவர்களிடம் "இவருக்கு என்ன பண்ணலாம்?"ன்னு கேட்டார். பண்டிதர்களுக்கு ஒண்ணும் சொல்லத் தெரியலை. பெரியவாள் அவர்களிடம்,

"நைமிசாரண்யம்னு ஒரு ஷேத்ரம் இருக்கு தெரியுமோ?

தெரியும்.. ஸ்வாமி

அங்கே என்ன விஷேசம்?

அங்கதான் ரிஷிகள்லாம் புராணங்கள் கேட்பா

புராணங்களை எழுதினது யாரு?

வியாஸர்... ஸ்வாமி

வியாஸாச்சார்யார் புராணங்களை எழுதின இடம்னு ஒரு ஸ்தலம் அங்கேயிருக்கு. அதுக்கு "வியாஸகத்தி"ன்னு பேரு."

பெரியவாள் பக்தரை அழைத்து "குடும்பத்தோட நைமிசாரண்யம் போய் கொஞ்சம் நாள் தங்கு. வியாஸர் புராணங்கள் எழுதின

இடத்துல விழுந்து.. விழுந்து.. நமஸ்காரம் பண்ணு. அப்புறம் உனக்கே எல்லா புராணங்களும் மனசுல ஸ்பூரிக்கும்"ன்னு சொன்னாராம்.

நிச்சயமாக அந்த பக்தருக்கு ஸ்பூரித்திருக்கும். பெரியவாள் சொன்ன வழி அனுபவ ஸாத்யமான வழி! அனுக்ரஹ வழி!

ஆமா... நைமிசாரண்யம் - பல ரிஷிகள் இறைவனோடு பேசி... பேசி... எழுதிய வேதங்கள் உருவாகிய இடம். பல வேதங்களை திரட்டி நான்கு வேதங்களாக தொகுத்திட்ட இடம். இங்கு ரிஷிகளே மரங்களாய் உள்ளதாகவும், மரங்களே தெய்வம் குடிகொண்டுள்ள இடமாகவும் கருதப்படுகின்றது. 108 வைணவத் திவ்விய தேசங்களில் ஓர் இடம் நைமிசாரண்யம்.

நைமிசாரண்யம் நமக்கு கற்றுக்கொடுக்கும் பாடம் என்ன?

"மரங்களை போற்றுங்கள்
மரங்களை காப்பாற்றுங்கள்"

மரங்களே உலகையும், பாரதத்தையும் காப்பதாக உள்ளது என்பதை சொல்லாமல் சொல்கிறது நைமிசாரண்யம்.

மனிதனாக நாம் பிறப்பதற்குக் காரணமே நாம் செய்த பாவச் செயல்கள்தான். நாம் செய்து வைத்திருந்த அல்லது செய்கிற பாவங்களை, பாவக்கதிர்களை தான் ஏற்றுக்கொண்டு நம்மை துக்கத்திலிருந்து காக்கக் கூடியவை மரங்கள். எனவேதான் பெரியோர்கள் கோவில்களில் மரங்களை வளர்த்து, அவற்றை வலச்சுற்றாக சுற்றி வரச்சொன்னார்கள்.

விருட்ச ஆயுர்வேதம் கூறும் மரங்களின் பலன்கள் பற்றி சற்றே சிந்திப்போம்... நம்மை அறியாமல் நாம் செய்யும் பாவங்களை பாவக்கதிர்களை கிரகிக்கும் சக்தி விருட்சங்களுக்கு உண்டு. உங்கள் நட்சத்திரத்திற்குரிய மரங்களை, நீங்களே உங்கள் கையால் நட்டு நீரூற்றி வளர்த்து வாருங்கள்... அந்த மரம் வளர, வளர

உங்கள் வாழ்வும் வளம் பெறும். சில மரங்களை வீட்டில் வளர்க்க முடியா பட்சத்தில் ஏதேனும் திருத்தலங்களில் நட்டு பராமரிக்கலாம். மரக்கன்றுகளை அவரவர்கள் பிறந்த நட்சத்திரம் உதயமாகும் நேரத்தில் நடுவது மிகவும் நல்லது. மரக்கன்றுகளை நட்டபின் அவரவரது கைகளால் நவதானியங்களை ஊற வைத்த தண்ணீரை அதற்கு ஊற்றி , ஊறிய நவதானியங்களை மரக்கன்றுக்கு உரமாக போடலாம்.

இப்படிச் செய்த மறு வினாடி முதல் அம்மரக்கன்று வளர வளர அதை நட்டவரது வாழ்வு மலர ஆரம்பிக்கும். மரக்கன்றுகள் பூத்து காய்க்கும் போது அவர்களது வாழ்வில் வளங்கள் நிறைய சேரும்.

இனி நமது பிறந்த நட்சத்திரத்திருக்குரிய மரங்கள் யாது எனப் பார்ப்போம்...

அஸ்வினி
1 ம் பாதம் - காஞ்சிதை (எட்டி)
2 ம் பாதம் - மகிழம்
3 ம் பாதம் - பாதாம்
4 ம் பாதம் - நண்டாஞ்சு

பரணி
1 ம் பாதம் - அத்தி
2 ம் பாதம் - மஞ்சக்கடம்பு
3 ம் பாதம் - விளா
4 ம் பாதம் - நந்தியாவட்டை

கார்த்திகை
1 ம் பாதம் - நெல்லி
2 ம் பாதம் - மணிபுங்கம்
3 ம் பாதம் - வெண் தேக்கு
4 ம் பாதம் - நிரிவேங்கை

ரோஹிணி
1 ம் பாதம் - நாவல்
2 ம் பாதம் - சிவப்பு மந்தாரை
3 ம் பாதம் - மந்தாரை
4 ம் பாதம் - நாகலிங்கம்

மிருகஷீரிஷம்
1 ம் பாதம் - கருங்காலி
2 ம் பாதம் - ஆச்சா
3 ம் பாதம் - வேம்பு
4 ம் பாதம் - நீர்க்கடம்பு

திருவாதிரை
1 ம் பாதம் - செங்கருங்காலி
2 ம் பாதம் - வெள்ளை
3 ம் பாதம் - வெள்ளெருக்கு
4 ம் பாதம் - வெள்ளெருக்கு

புனர்பூசம்
1 ம் பாதம் - மூங்கில்
2 ம் பாதம் - மலைவேம்பு
3 ம் பாதம் - அடப்பமரம்

4 ம் பாதம் - நெல்லி

பூசம்

1 ம் பாதம் - அரசு

2 ம் பாதம் - ஆச்சா

3 ம் பாதம் - இருள்

4 ம் பாதம் - நொச்சி

ஆயில்யம்

1 ம் பாதம் - புன்னை

2 ம் பாதம் - முசுக்கட்டை

3 ம் பாதம் - இலந்தை

4 ம் பாதம் - பலா

மகம்

1 ம் பாதம் - ஆலமரம்

2 ம் பாதம் - முத்திலா மரம்

3 ம் பாதம் - இலுப்பை

4 ம் பாதம் - பவளமல்லி

பூரம்

1 ம் பாதம் - பலா

2 ம் பாதம் - வாகை

3 ம் பாதம் - ருத்திராட்சம்

4 ம் பாதம் - பலா

உத்திரம்

1 ம் பாதம் - ஆலசி

2 ம் பாதம் - வாதநாராயணன்

3 ம் பாதம் - எட்டி

4 ம் பாதம் - புங்கமரம்

ஹஸ்தம்

1 ம் பாதம் - ஆத்தி

2 ம் பாதம் - தென்னை

3 ம் பாதம் - ஒதியன்

4 ம் பாதம் - புத்திரசீவி

சித்திரை

1 ம் பாதம் - வில்வம்

2 ம் பாதம் - புரசு

3 ம் பாதம் - கொடுக்காபுளி

4 ம் பாதம் - தங்க அரளி

சுவாதி

1 ம் பாதம் - மருது

2 ம் பாதம் - புளி

3 ம் பாதம் - மஞ்சள் கொன்றை

4 ம் பாதம் - கொழுக்கட்டை மந்தாரை

விசாகம்

1 ம் பாதம் - விளா

2 ம் பாதம் - சிம்சுபா

3 ம் பாதம் - பூவன்

4 ம் பாதம் - தூங்குமூஞ்சி

அனுஷம்

1 ம் பாதம் - மகிழம்

2 ம் பாதம் - பூமருது

3 ம் பாதம் - கொங்கு

4 ம் பாதம் - தேக்கு

கேட்டை

1 ம் பாதம் - பலா

2 ம் பாதம் - பூவரசு

3 ம் பாதம் - அரசு

4 ம் பாதம் - வேம்பு

கற்பகதரு ட்ரஸ்ட்
கிரந்தாலயம்

மூலம்

1 ம் பாதம் - மராமரம்

2 ம் பாதம் - பெரு

3 ம் பாதம் - செண்பக மரம்

4 ம் பாதம் - ஆச்சா

பூராடம்

1 ம் பாதம் - வஞ்சி

2 ம் பாதம் - கடற்கொஞ்சி

3 ம் பாதம் - சந்தனம்

4 ம் பாதம் - எலுமிச்சை

உத்திராடம்

1 ம் பாதம் - பலா

2 ம் பாதம் - கடுக்காய்

3 ம் பாதம் - சாரப்பருப்பு

4 ம் பாதம் - தாளை

திருவோணம்

1 ம் பாதம் - வெள்ளெருக்கு

2 ம் பாதம் - கருங்காலி

3 ம் பாதம் - சிறுநாகப்பூ

4 ம் பாதம் - பாக்கு

அவிட்டம்

1 ம் பாதம் - வன்னி

2 ம் பாதம் - கருவேல்

3 ம் பாதம் - சீத்தா

4 ம் பாதம் - ஜாதிக்காய்

சதயம்

1 ம் பாதம் - கடம்பு

2 ம் பாதம் - பரம்பை

3 ம் பாதம் - ராம்சீதா

4 ம் பாதம் - திலகமரம்

பூரட்டாதி

1 ம் பாதம் - தேமா

2 ம் பாதம் - குங்கிலியம்

3 ம் பாதம் - சுந்தரவேம்பு

4 ம் பாதம் - கன்னிமந்தாரை

உத்திரட்டாதி

1 ம் பாதம் - வேம்பு

2 ம் பாதம் - குல்மோகர்

3 ம் பாதம் - சேராங்கொட்டை

4 ம் பாதம் - செம்மரம்

ரேவதி

1 ம் பாதம் - பனை

2 ம் பாதம் - தங்க அரளி

3 ம் பாதம் - செஞ்சந்தனம்

4 ம் பாதம் - மஞ்சபலா

இந்தியாவில் முதன்முதலில் அரசு சார்பாக 1947ம் ஆண்டு மரம் நடும் வார விழா கொண்டாடப்பட்டது. இதில் தில்லியில் உள்ள புரானாக்கிலா மைதானத்தில் செம்மந்தாரை (காஞ்சனார்) மரக்கன்றுகளை நட்ட அன்றைய பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவரது உரையில், மரம் வெட்டுவதை தடுக்க சட்டம் வேண்டும் என்றும், வளரும் மரங்களே முற்போக்குள்ள நாட்டின்

கற்பகதரு ட்ரஸ்ட்
கிரந்தாலயம்

உயிர்த்துடிப்பான சின்னங்கள் என்றும், ஒரு மரத்தை நட்டு விட்டுத்தான் ஒருவன் பட்ட மரத்தை வெட்ட வேண்டும் என்றும் கூறினார்.

விருட்ச ஆயுர்வேதம் - பாடல் 8

"அறம், பொருள், இன்பம், வீடு என்ற மனித நெறிகளை மரங்கள் வழங்குகின்றன. இந்த உண்மையை உணர்ந்து மனிதர்கள் மரங்களை நட வேண்டும்."

விருட்ச ஆயுர்வேதம் - பாடல் 97

"இந்த பூமியில் மரங்கள் எல்லையில்லா மகிழ்ச்சியை வழங்கும். ஏனெனில் அவை நம்மை கொடிய வறுமையிலிருந்து காப்பாற்றுகின்றன. ஆதலால் "த்ரவஹ (ரட்சகன்)" என்று மரங்கள் அழைக்கப்படுகின்றன."

- இனியும் தொடரும்...

"மரங்கள் நமக்கு, பிறந்தவுடன் தொட்டில், நடை பழக நடைவண்டி, வளரும்போது நாற்காலி மேசை, வாழ வீடு, உண்ண உணவு, பழங்கள், கால்நடைகளுக்கு இலைதழைகள், நோய் தீர்க்க மருந்துகள் இப்படி ஏராளமான விஷயங்களைத் தருகிறது. நம்முடைய கரிக் காற்றை உள்வாங்கிக் கொண்டு சுத்தமான காற்றாக மாற்றி திரும்ப நமக்கே அளிக்கிறது. ஜனனம் முதல் மனிதனின் வாழ்வெங்கும் வருகிற தாவர - வரம், மரம். ஒரு மரம் என்பது பூமிக்கு மேலே எப்படிக் குடை பிடிக்கிறதோ அதைப் போலவே வேர்களும் பூமிக்குக் கீழே குடை விரிக்கின்றன. தண்ணீரைச் சேமிக்க நாம் மேல்நிலைத் தொட்டியைக் கட்டுவது போல, மரங்கள் பூமிக்குக் கீழே கீழ்நிலைத் தொட்டியைக் கட்டியுள்ளன. தண்ணீர் அந்த வேர்த் தொட்டியில் சேமிக்கப்படுகிறது. நிலத்துக்குக் கீழே நீரைச் சேகரிக்கவும், சுத்தமான மழை நீரை மண்ணுக்கு வழங்கவுமாக, மரங்களால் ஏற்படும் மறைமுக நன்மைகள் இவை."

- கோ. நம்மாழ்வார்.

மரம் வளர்ப்போம்! நிலம் காப்போம்!

ஐயம் தெளிதல்

முத்திரைகள் என்றால் என்ன? அவற்றைப் பற்றி விளக்க முடியுமா?

உடல், மனம், உயிர் மற்றும் அறிவைக் காத்திடவும், மனித பிறப்பின் இலக்கினை மனிதன் அடைந்திட யாதெல்லாம் தடையாக உள்ளதோ அத்தடைகளை நீக்கி இயற்கை இன்பத்தினை வாழ்வின் பேரின்பமாக மாற்றிட நமக்கு சித்தர்கள் அருளிய பல கலைகளில் முத்திரையும் ஒன்றாகும்.

முத்திரை எனும்போது அவை பல வகைகளாக, பல வரிசைகளாக, பல நன்மைகளை கொடுக்கக் கூடியதாக... இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். எனினும் அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உண்டு என்பதே முத்திரை கலைகளின் அடிப்படை கூற்றாகும்.

பிரபஞ்சமாக விரிந்துள்ள இயற்கையே மனிதனாகவும் உள்ளதால் பிரபஞ்ச சக்தி மனித சக்திக்குள்ளும் உண்டு. பற்பல காரணங்களால் சக்தி ஓட்டம் தடைப்பட்டு, சக்தி மாற்றம் ஏற்பட்டு பிரபஞ்ச சக்தியை தன் சக்தியாக உணர முடியாமல் இருக்கின்றான் மனிதன். இருப்பினும் உடல் நலம், மன நலம், அறிவு நலம் காத்திட எத்தனையோ பல வழிகள் உலகில் உள்ளது போல முத்திரைகளும் தமது பங்கினை மனிதனுக்கு கொடுக்கின்றன.

தன்வந்தரி சித்தர் தனது "தன்வந்திரி வைத்தியம் 1000" என்ற நூலில் முத்திரைகளின் சிறப்பினை கீழ்வருமாறு போற்றுகின்றார்.

"சுத்தமுள்ள முத்திரைகள் தன்னிலேதான்
சுகமான ஆறுவகை முத்திரைகள் நன்று
பக்தியுடன் ஆறுவகை முத்திரையினாலே
பகுத்தறிந்து ஆதார தெரிசனைகள் பெற்று
வித்தான பிறவிதனை நன்றாய் நீக்கி
வேதாந்த பூரணமாய் விளங்கு முக்தி".

இந்த முத்திரைகள் ஞானத்தில் பூரணத்தை கொடுக்கவும் வல்லது என்கின்றார் தன்வந்திரி சித்தர். முத்திரைகளில் விரல்களே பிரதானம் என்பதால் விரல்களுக்கும் மதிப்பளித்தல் அவசியம் என நாம் ஆத்மன் பயிற்சிகளில் பார்த்து வருகின்றோம். மேலும் சில முத்திரைகளை பிறர் காணும்படி செய்யாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டு வருகின்றது.

விரல் தத்துவம்

"முக்தியுள்ள கரத்தின் விரல் மகிமை தன்னை
முக்கியமுடன் சொல்லுகின்றேன் நன்றாய் கேளு
பக்தியுள்ள அங்குட்டம் பெருவிரலால் நிற்கும்
பதிவாக அடுத்த விரல் தர்ச்சினை யாம்மைந்தா
சித்தமுள்ள நடுவிரல்தான் மத்திமையா நிற்கும்
திறமான பவுத்திரன்தான் அனாமிகையாய் நிற்கும்
சுத்தமுள்ள சுண்டு விரல் கனுட்டிகையாய் நிற்கும்
சுகமாக இதையறிந்து முத்திரையுஞ் செய்யே"

- தன்வந்திரி.

1. பெருவிரல்	- அங்குட்டம்	- நெருப்புத் தத்துவம்
2. பெருவிரலுக்கு அடுத்த விரல்	- தர்ச்சினை	- காற்றுத் தத்துவம்
3. நடுவிரல்	- மத்திமை	- ஆகாசத் தத்துவம்
4. அடுத்த விரல்	- அனாமிகை	- நிலத் தத்துவம்
5. சுண்டு விரல்	- கனுட்டிகை	- நீர்த் தத்துவம்

இவற்றைப் பற்றி முதலில் தெள்ளத் தெளிவாக தெரிதல் அவசியம். பொதுவாக ஒவ்வொரு முத்திரைக்கும் தனித்தன்மையும் குணமும் உண்டு. பல முத்திரைகள் மிகவும் சிறப்பு சேர்ப்பவை. ஒரு ஞான ஆசிரியர் துணை கொண்டு பயில்வதில் சிறப்பும் உண்டு. இவற்றைப் பற்றியெல்லாம் நாம் நமது தொண்டர்கள் பயிற்சி (service batch) வகுப்புகளில் விரிவாக சிந்திக்கவுள்ளோம் என்பதால் தொண்டர்கள் பயிற்சிகளின் முக்கியத்துவம் உணர்ந்து சிறப்பு சேர்த்திட வேண்டுகின்றோம். ■

அனந்தமே ஜெயம் எல்லாம் கைகூடும்

மோனாலயம்

(உலக சமாதானத்திற்கான ஓர் ஆலயம்)

தினசரி தவம் நிகழும் நேரம்

காலை : 4.00 முதல் 5.15 மணி வரை

(சிறப்பு அனுமதி பெற்றோருக்கு மட்டுமே)

காலை : 5.30 முதல் 6.00 மணி வரை

மதியம் : 12.00 முதல் 12.30 மணி வரை

மாலை : 6.00 முதல் 7.00 மணி வரை

உள் அனுமதி : தவம் பயின்றிருக்க வேண்டும், அனுமதி அட்டை பெறவேண்டும்

குறித்த நேரத்திற்கு 10 நிமிடங்களுக்கு முன்னமே உரிய அமர்வு தேவை.

அனுமதி அட்டை பெறவும், மேலும் விபரங்களுக்கும்

திரு. C.A.G. கிருஷ்ணமூர்த்தி - 94434 90219

அவசியம் பின்பற்ற வேண்டிய நடைமுறை விதிகள்:

1. மௌனம் மட்டுமே இங்கு மொழி. சைகை கூடாது, கால் கொலுசுடன் உள்ளே நுழைவது கூடாது.
2. தெய்வீக சாந்நித்யம் மோனாலயத்தில் உள்ளதால் அனைத்து வகையிலான தூய்மையும் தேவை.
3. வளாகத்தின் உள்ளே நுழைந்ததும் 6 முறையும், தவம் முடித்து வெளி வந்த பின் 3 முறையும் வலச்சுழலாக சுற்றி வரவும். சுற்றும் போது **உலகிலே சாந்தி நிலவ வேண்டும், ஆத்ம சக்தி ஓங்க வேண்டும்** என்ற எண்ண அலைகளை பரப்பி வரவும்.
4. குறிப்பிட்ட தவ நேரத்திற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாகவே மோனாலயத்தினுள் உரிய அமர்வு தேவை. தவம் ஆரம்பித்த பின் அன்பர்களை எவ்விதத்திலும் தொந்தரவு செய்தல் கூடாது.
5. தவம் ஆரம்பிக்கும் நேரம் மற்றும் முடிக்கும் நேரத்தில் மணி ஓசை எழுப்பப்படும். இக்குறிப்பினை அறிந்து அதற்கொப்ப நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
6. ஆழ்நிலை தியானம் மேற்கொள்பவர்களும், தொடர் மௌனம் இயற்றுபவர்களும் தனி நடைமுறை விதிகளை நிர்வாகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளவும் வேண்டப்படுகிறது.

கற்பகதரு ட்ரஸ்ட்
கிரந்தாலயம்

GOD IS LOVE

அன்பே சிவம்

- Yogi. N. Meenakrishnan.

கற்பகதரு ட்ரஸ்ட்

Beloveds, with the blessings of the Divine, hope this New Year has brought everyone joy and happiness.

Many times I am very much moved by the love of the GURUs or Masters who lived in this Earth and are living with us mortal or immortal. Such thoughts always pre occupy my mind. How are they able to live a Divine life irrespective of the Worldly struggles and difficulties they confront with? I am enthralled by their devotion, dedication, love, sacrifice, surrender, Divinity, compassion, love for nature and helping tendency. They live completely for the good of the society. They never expect anything in return, they never even think of the returns. They are wholesome dedication and pure Divine Love. They are GOD thyself living purely for the people. How is this possible?

One of the speeches of our Master clarified my doubts. My Master's explanation on detached attachment made it clear. The speech by our Master.....

"DETACHED ATTACHMENT".

'உறவிலே கண்ட உண்மை நிலை தெளிவு....துறவு'.

'The truth behind all relationship is evident... It is renunciation'.

"In this statement we have to clarify what is relationship, what is the truth behind the relationship and what is renunciation?

Lord Krishna lived these stages. Krishna had no disciples. Those who inculcated these stages in their life imagined themselves as Krishna's disciples. But Krishna never told them that He was their Guru. In Gita Krishna says ' I will be beside you' but he never said, that 'I will be with you.' Even in Kurushetra war Krishna and Arjuna were separate. Krishna was Arjuna's chariot driver. There was no attachment between the two. There is difference between to be with you (உடன் இருத்தல்) and to support you (துணை இருத்தல்). Krishna lived a true ascetic life.

What is a true relationship? There is the body, there is the soul, there is the mind, the cells and the intelligence behind every single cell. Observe very closely, what we is a detached attachment. This is the true law of Nature. If we are getting attached to anyone or anything, then we are going against the law of Nature. We are floating against the rhythm of Nature.

For example, there is water element in our body in the form of blood, urine etc... blood flows through our body; does it stick to our body? No. It is running continuously through our body as energy on one side and as waste on the other side. It is a separate entity. It passes through our body and comes out. The water we drink too goes into our body, does its job and comes out. It never gets attached to us. This is the case in all our relationships.

Now let us see about getting attached permanent and keeping detached permanent. Being attached is not permanent. No one in this universe is attached to anyone or anything. Never can we live in attachment. This is the true base. This is the truth behind any relationship. We have to be very clear and transparent about our relationships. Whatever experience we get from all the relationship is Wisdom and it is coherent. The experience we incur from the detached attachment relationship is clarity and we attain true Wisdom. That is an ascetic one. (துறவு நிலை).

Now we have to understand what clarity is meant by. Clarity is Wisdom. Wisdom is Godly or Divinely. Whoever sticks to Wisdom, will lead a Divinely life.

For example, we need a pillow to sleep. We have taken the pillow. What is the relationship between the pillow and us? Is it attached or detached? Definitely it is detached. But for our sight it will seem as attached. The pillow and the head seems to be attached. But the pillow will never change into our head. It will always remain a pillow only. The pillow does its duty. We are enjoying it's help. The pillow and the head - what is attached and what is detached here? We are attached to the illusionary pillow and not to the original one. To make it clear, remove the inner and the outer cover of the pillow. Can we sleep now? No. Daily we were sleeping on this pillow. Now we cannot sleep because there is only the cotton now. We were sleeping on an illusionary pillow till now. We never slept on a true pillow. The imaginary pillow gave us the sleep and we slept on it. What gave you the sleep? Was it the pillow or the illusion or our imaginary thoughts? It's our thoughts which gave us the sleep. We imagined we are sleeping on a pillow. That gave us the sleep. Originally we don't need a pillow to sleep. The illusionary pillow had given us the sleep. We have become dependent on a pillow. Even while travelling most of us carry a pillow. We imagine that we can sleep only if we have a pillow or only if I drink water, or only after reading a book etc... - A dependent life.

We live in an imaginary World and we never realize the truth. How are we going to attain the ascetic or true life?

When we cannot free ourselves from a simple pillow, how are we going to attain the ascetic life? We have got a family where there is the husband wife relationship, parent children relationship, our relatives are there, our work is there, our social status is there etc... Everything should be there, but live a detached life. Enjoy the experiences from it. We must be able to sleep without a pillow. Be it material or non- material, come out of everything. When we are not clear about Worldly relationships, how can we know what to attain? Less luggage more comfort. We must be ready to forgo anything at any moment.

As Ramakrishna paramahamsar had said, "Your madness and your childishness within you should come out. With out that you cannot attain salvation".

We are nothing. We are stuffed with so many imaginations. It is not at all necessary to get attached to anything, because by birth itself we have attained Wisdom. By so many imprints and so many habits we have changed ourselves. We are struggling to abolish all those things.

We live in a society. We need money. To live we need money, Wisdom and the blessings of the Divine. Once we realize this truth, it's our duty to help others to realize the same too. We receive benefits from others. It's our duty to give something in return. We should work for it. There should be love in it, generosity in it and a soulful feeling that the benefit reaches the society in return. We are so dependant. Even a hen leaves her chicks after nursing for a month or two, but we keep on attaching ourselves to all the generations to come. Nature's law is detached attachment. Man attains wisdom by experiences he got through adhering to this law. We should live a detached life and attain an ascetic life. Lord Krishna lived this life. As Krishna says 'He who has no attachments can really love others, for his love will be pure and Divine.'"

I was moved by my Master's reverence to the GURUS, his dedication, devotion, love, sincerity and surrender to the work he does, whether spiritual or worldly. In either case my Master's respect to his work, the care he takes for his fellow beings, the hard work he puts in for the work assigned and the way he works it out really moves me. His mind never sleeps, only his body takes rest. Watching my Master work so intact and wholesome was adorable and I feel I am blessed to be a speck of his Divine work. I bow before the Divine and all the Gurus to bestow him with all the love.

'தெளிவு குருவின் திருமேனி காண்டல்,
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்,
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்,
தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே' - திருமூலர்

'Thelivu Guruvin thirumeni kaandal,
Thelivu Guruvin thiruvaarthai kaettal,
Thelivu Guruvin thirunamam seppal,
Thelivu Guru uru sinthithal thane.'

- Saint Thirumoolar.

'Clarity is seeing the holy body of the Guru
Clarity is listening to the holy words of Guru
Clarity is saying the holy name of Guru
Clarity is contemplating on the holy form of Guru'.

To be continued...

கற்பகதரு ட்ரஸ்ட்
கிரந்தாலயம்

நிகழ இருப்பவை - திருப்பூர் சேவை மையம்

பிரதி மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை
ஆத்மன் – ஆன்ம நல மேம்பாட்டுப் பயிற்சிகள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு வாழ்வில் வளங்கள் பெற அன்போடு அழைக்கின்றோம். **மேலும் விபரங்களுக்கு – 94420 03230.**

கிரந்தாலயம் (காலாண்டு இதழ்)

அன்பர்களே!

"உனக்கும் நல்லதாய் ஊருக்கும் நல்லதாய்
நினைப்பதும் செய்வதும் நித்திய கடன்"

எனும் குரு நெறிப் பிடியில் வளர்ந்து வரும் கற்பகதரு ட்ரஸ்ட், மரம் வளர்த்தல், இயற்கையை பாதுகாத்தல், வறியோர்க்கு உதவுதல், குறிப்பிட்ட கால இடைவெளியில் இலவச மருத்துவ முகாம்களை நடத்துதல், மனித குலத்துக்கு தேவையான உண்மையினை கொண்டு செல்லுதல் போன்ற உயரிய நோக்கங்களைக் கொண்டு செயலாற்றி வருகிறது. அவ்வகையில் தங்களது அன்பினையும், ஆதரவினையும், தொண்டினையும் நல்கிய நல் இதயங்களுக்கு எங்களது நன்றியினை காணிக்கையாக்குகின்றோம். மேலும் நமது தொண்டினைச் சிறப்பாக தொடர்ந்திட உதவ விரும்புவோர், ட்ரஸ்டின் வளர்ச்சிக்குத் தங்களது பங்களிப்பை நன்கொடையாக அளித்து உதவலாம்.

*நன்கொடையாளர்களுக்கு கிரந்தாலயம் நூல் அவர்களது இல்லங்களுக்கே அனுப்பி வைக்கப்படும். இவ்வரிய தொண்டில் இணைந்திட தங்களை அன்போடு வேண்டுகின்றோம்.

***நன்கொடையாளர்களுக்கு கிரந்தாலயம்**

ரூ 300 க்கு	-	ஏப்ரல்	2016 முதல்	மார்ச்	2017	வரை
ரூ 1000 க்கு	-	முதல்	இதழ் முதல்	மார்ச்	2017	வரை
ரூ 1500 க்குமேல்	-	முதல்	இதழ் முதல்	மார்ச்	2019	வரை

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

கற்பகதரு ட்ரஸ்ட்

6, சுப்ரமணிய முதலி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15.

தொடர்பு கொள்ள வேண்டிய நபர்:

திருமதி. S. நளினி அம்மா அவர்கள்

அலைபேசி எண்: 97909 17473

Our Bankers : State Bank of India
Valluvarkottam branch, Chennai.
Account Name : Karpagadaru Trust.
Account no.: 31471914291,   IFSC Code: SBIN0002244

குருநாதபுரம்

ஞானத்திருக்கோயில்

ஸ்ரீ ஞானசாயி உலக சமாதான மையம்

ஆம்பூர் - குடியாத்தம் சாலை, கீழ்பட்டி(அஞ்சல்), வேலூர் - 635805.

E-mail: gnanasaicenter@gmail.com

உலக சமாதானத்தைக் குறிக்கோளாய் கொண்டு பற்பல சேவைகளை ஆற்றி வரும் தொண்டு நிறுவனமே கற்பகதரு ட்ரஸ்ட். அதன் ஓர் அங்கமான ஸ்ரீ ஞானசாயி உலக சமாதான மையம் ஆம்பூர் - குடியாத்தம் சாலையில் அமைந்துள்ள குருநாதபுரத்தில் நிறுவப்பட்டு வருகின்றது.

உலக நன்மை வேண்டியும், ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்வதற்காகவும் அமையப்பெற்று வரும் இம்மையத்தில் சீரடி சாயி பகவான் ஆலயத் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. சீரடி சாயிநாதரே முன்னின்று அமைக்க உள்ள இந்தத் திருப்பணிக்கு புரவலர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

அன்பர்கள் குறைந்த பட்சம் ரூபாய் பத்தாயிரம் நன்கொடையாக அளித்து இப்புனித திருப்பணியில் தம்மை புரவலர்களாக இணைத்துக் கொள்ளலாம். புரவலர்களுக்கு நன்றி பாராட்டும் விதமாக ஸ்ரீ ஞானசாயி உலக சமாதான ஆலயத்தில் வருடத்தில் ஒரு நாள் (அவர்கள் விருப்பப்படும் நாளில்) அவர்களுக்காக வருடா வருடம் வழிபாட்டுடன் கூடிய சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெறும். இச்சிறப்பு பிரார்த்தனைகளில் தாங்கள் குடும்பத்துடன் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

திருப்பணிகள் யாவும் முழுமையடைந்து ஆலயத்தை உலகிற்கு சமர்ப்பணம் செய்திட்ட நாளிலிருந்து மேற்சொன்ன வழிபாடுகள் நடைபெறும். மேலும் கற்பகதரு ட்ரஸ்டின் வெளியீடாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும் “கிரந்தாலயம்” இதழ்களும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். விருப்பம் உள்ளோர் பின்பக்கத்தில் உள்ள படிவத்தினை பூர்த்தி செய்து குறிப்பிட்டுள்ள இணைப்புகளுடன் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ ஞானசாயி உலக சமாதான மைய கட்டிட திருப்பணிக்கான புரவலர் படிவம்

பெயர் :____

அலைபேசி :____

முகவரி :____

____

அஞ்சல் குறியீட்டு எண்:______________________________

மின்னஞ்சல் :____

வழிபாடுகள் செய்யப்பட வேண்டிய நாள்:______________________

வழிபாடுகள் செய்யப்பட வேண்டிய நபரின் பெயர்:____________________________________

இத்துடன் ரூ.________________ (ரூபாய் ____மட்டும்) அனுப்பியதற்கான வங்கி கணக்கு சீட்டின் நகலை இணைத்துள்ளேன்.

நாள்: கையொப்பம்

வங்கி விபரம்	**அனுப்ப வேண்டிய முகவரி**
BANK: **BANK OF BARODA**	JAYASRI W/o L.L.S MANIKGHANTAN
BRANCH: **VELACHERRY, CHENNAI**	LAWSON TEA DIVISION,
ACCOUNT NAME:	CINCHONA PO, VALPARAI,
SHREE GNANA SAI WORLD PEACE CENTER	COIMBATORE DT,
ACCOUNT NUMBER: **35860200000122**	Pin: 642106.
IFSC CODE: **BARB0VELACH** (0 = zero)	Cell: 9443506492